தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, தை 25 (7-2-'59). சனிக்கிழமை | இதழ் 34

படைமறவர் பதினைவர்!

மார்ச் இரண்டாவது வாரம்; நள்ளிருள்; நடுச்சாலை; சிற்றூரான வசா; முகமூடி அணிந்த பதினைந்து மறவர்கள் அணிவகுத்துச் செல்கின்றனர். ஓராண்டுக்கு முன் இப்படி எவரும் நடந்திருந்தால், வெள்ளைப் படைக்கு யாரோ பலியாகப் போகின்றனர் என்றுதான் எண்ணலாம். இப்போதோ...

மறவர் பதினைவரும் அச்சிற்றூரின் கேளிக்கை விடுதிக்குள் நுழைந்தனர். நள்ளிரவில் தமைமறந்து-நாட்டில் நடக்கும் விடுதலைப் போரையும் மறந்து ஆடிப் பாடிக்கொண்டிருந்த அத்துணைப் பேரும் நிலைகுலைந்தனர்.

"சுவரை நோக்கித் திரும்புங்கள்!"

படைத் தலைவனின் கட்டளை வெடித்தது. எல்லோரும் சுவருக்கு முகம் காட்டி நின்றனர், சிலையாக. படை வீரர்களுள் சிலர் முன் சென்று அத்துணைப் பேருடைய பைகளையும் சோதனையிட்டனர். தேடித் துளைத்தது வேறு எதையுமல்ல: பிரித்தானியச் சுருட்டுகளையும் சிகரெட்டுகளையும் தாம். விடுதியில் இருந்தோரை நோக்கி படைத்தலைவன் கர்னல் ஜார்ஜ் கிரிவாஸ், ஒரு துண்டு அறிக்கையைத் தந்தான். உரிமைக் கொடியை உயர்த்திப் பிடித்திருக்கும் அவன் தந்த அறிக்கையின் சாரம் இதுதான்: "நம் நாட்டின் பொருளியல் விடுதலைக்காக) பிரித்தானியரது விளையாட்டுத் திடல்களுக்குச் செல்லாதீர்! பிரித்தனிலிருந்து இறக்குமதியாகின்ற புகைச் சுருட்டுகள், மதுவகைகள், செருப்புக்கள், தின் பண்டங்கள் போன்ற எதையும் வாங்காதீர்! போதைப் பொருள்கள் மூலமாகவும் கேளிக்கைக் கருவிகள் மூலமும் பிரித்தானியர் நம் பொருள் வளத்தைச் சுரண்டிச் செல்கின்றனர். கொடுங்கோலோச்சும் அன்னாரின் கொள்ளையைத் தவிர்க்க, கொடுமையை அடக்க, பிரித்தானியப் பொருள் ஏதும் வாங்காதீர்! நம் நாடு நமதே ஆக, நம் பொருள் நமக்கே ஆக, நம்மவர் செய்த பொருள்களையே வாங்குங்கள்!"

இப்படி ஓடிய அறிக்கை படித்து முடிக்கப்பட்டதும், படைத்தலைவன் கிரிவாஸ், குன்றென நின்று முழங்கினான்.

"பிரித்தன் - கழுகாகச்சாடி, நம் கண்ணைக் கொத்துகிறது! கவர்ச்சிப் பொருள்களை நம்மிடம் இறக்கி, நம் வியர்வையைக் கொள்ளை கொள்கிறது. தனது பொருள்களுக்கு விற்பனைச் சந்தையாகவே நம் நாட்டை மதிக்கிறது. அதனால்தான் நம் விடுதலை மணிமுடியை மிதித்துச் சுக்கு நூறுக்குகிறது.

மானமுள்ளோர் - மாதா மண்ணின் மேல் ஆர்வமுள்ளோர் - மனங்களிக்கும் விடுதலை உணர்வுள்ளோர் - யாரேனும் இந்தச் சுரண்டலை ஒப்புவரோ?

பிரித்தான் நம் சட்டைப்பைக்குள் தன் கையை நுழைத்து செல்வத்தைச் சூறையாடுகிறது. அதற்கு அது போடும் பட்டுத்திரைகள் தாம், இறக்குமதி வரி, தீர்வை, சங்கத் துறையினர் போடும் அபராதங்கள் முதலியன! நம் செல்வத்தை - பொருளை - உழைப்பை இப்படியும் கொள்ளைகொள்ள நீவிர் ஒப்புவீரோ?

கல்லும் முள்ளும் உள்ள கரடு முரடான விடுதலைப் பாதையில் செல்லும் உங்கள் தாள்களுக்கு வேண்டுமா, பிரித்தானியர் செய்த அலங்காரச் செருப்புக்கள்?

வாழ்வு வளைந்து கிடப்பதை மறந்து, பிரித்தானியச் சுருட்டுக்கள் எழுப்பும் புகைவளையங்களிலே மயங்கிக் கிடக்கத்தான் ஆசைப்படுகின்றீரா?

நம் செங்குருதி உறிஞ்சப்படுவதை மறந்து, பிரித்தானிய மதுவகைகளை உறிஞ்சத்தான் போகின்றீரோ?

மானமுள்ளோர் - விடுதலை உணர்வுள்ளோர் - தன்னலத்தைத் துறந்திடுக! தாயகமீட்புப்படையில் சேர்ந்திடுக-பிறர் தயாரிப்புக்களை மறுப்பதன்-பகிஷ்கரிப்பதன்மூலம்!" அவன் பேசிமுடித்தான். சோதனையும் முடிந்தது. கைப்பற்றிய பொருள்களோடு வெளியேறி அவற்றைக் குப்பை மேட்டில் எறிந்தனர்.

இப்படி அன்னியப் பொருள் மறுப்பு-சுரண்டல் கருவிகள் எதிர்ப்பு, கடந்த 58-ம் ஆண்டு மார்ச் திங்களில்தான் நடந்திருக்கிறது, மகாரியஸ் பாதிரியார் தலைமையில் போராடும் சைப்ரசில் ஆண்டு பலவாகப் போராடிப் போராடி அலுத்துப் போன அம்மக்கள் தாம் இப்புது முறையைக் கையாண்டிருக்கின்றனர். அது வெகுவாகப் பலனையும் அளித்திருக்கிறதாம்.

சரிகிறது பேரரசு

EOKA என்ற இப் புரட்சிப் படையினர் கையாளும் இந்தப் புது முறையால். சுதேசிப் பொருள்களுக்கு மதிப்பு ஏற்பட்டிருக்கிறதாம். முன்பு வேலையற்றுச் சுருண்டுகிடந்த சைப்ரஸ் செருப்புத் தொழிலாளர்க்கு இப்போது ஓயமுடியாத அளவு வேலைகள். அன்னார் தயாரிப்பு மட்டமானதாய் இருந்தும், உள்நாட்டுப் பொருள் என்பதால் தனி மதிப்பு ஏற்பட்டுவிட்டதாம். பிரித்தானிய சிகரெட்டுகளும் மதுவகைகளும் தேங்கிக் கிடக்கின்றனவாம். தின் பண்டங்கள் கேட்பாரற்றுக் கெட்டுப் போனதால் தெருவில் எறியப்படுகின்றனவாம். இப்படி வெளியார் பொருள்களை மறுப்பதோடு ஒத்துழையாமை இயக்கமும் உருவெடுத்திருக்கிறது.

பிரித்தானிய ஆட்சியினர், மருத்துவ மனை நிதி ஒன்றிற்காக நடத்திய லாட்டரிச் சீட்டுக்கள் இலட்சக்கணக்கில் விற்காது போயின. மாற்றான் ஆட்சியின் கீழ் உழைத்த சிற்றூர் அலுவலரான 1300 தலையாரிகளும் கணக்குப் பிள்ளைகளும் தம் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டதோடு, "இனி பிரித்தானிய ஆட்சியோடு எவ்வகையிலும் ஒத்துழைக்கமாட்டோம்" என அறிவிப்பும் தந்திருக்கின்றனராம். நிலைமை முற்றிவிட்டது; நிலைகுலைந்த மக்கள் கொதித்தெழுந்துவிட்டனர். நீர் மேலெழுந்துதான் இனி சைப்ரசில் பிரித்தானிய ஆட்சி.

நிகழ்வதை எல்லாம் கவனித்தலுத்த ஒரு பிரித்தானிய வணிகர், "இனி, இந்தியாவில் காந்தியின் நாட்களில் நடந்ததுபோல, சைப்ரஸ் மக்கள் பிரித்தானியர் நிர்வாகத்தில் உள்ள புகைவண்டிப் பாதைகளில் படுத்து மறியல் செய்தாலும் விந்தையில்லை. நிலைமை அவ்வளவு கடுமையாயிருக்கிறது!" என்றாராம்.

இது வெடித்தெழுந்த புரட்சியின் ஒரு பகுதிதான். பிறநாட்டார் பொருளை வாங்காதே என்பதோடு நிற்கவில்லை அந்தப் போர். பிரித்தானியப் படையினரை - கொடுங்கோன்மைக்கு அரண் கட்டுவோரை, அங்கங்கே எதிர்த்து வருகின்றனர். அதன் முடிவு, நாடெங்கிலும் துப்பாக்கி முழக்கம்; குருதி மழை; அவல ஒலி; இன்னபிற.

அழகு கொழிக்கும் இந்தத் தீவு-நெடிய பச்சைமலைத் தொடர்கள், கனி தரு மர வரிசைகள், கதிர் மணி

— 9-ம் பக்கம் —

? வினா — விடை

கண்ணதாசன் பதிலளிக்கிறார்

மு. வெ. சீலன், சென்னை.

மார்ஷல் டிட்டோ அவர்களைத் தமிழ்நாட்டுப் பொதுவுடைமை வாதிகள் வரவேற்பு ஒன்றும் தராமல் மௌனம் சாதித்ததின் காரணம் என்ன?

இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குச் சொந்தக் கொள்கையும் இல்லை, சுயமான சிந்தனையும் இலட்சியமும் இல்லை. பல ஆண்டுகளாகவே அவர்கள் மாஸ்கோவின் மனநிலைகளுக்கேற்பத் தங்களின் செயல்முறைகளை வைத்திருக்கிறார்கள். மார்ஷல் டிட்டோவை, குருஷ்சேவும் அவரது கூட்டாளிகளும் மிகப் பெரிய எதிரியாகக் கணக்கிட்டுப் பல துறைகளிலும் கேடு விளைவித்து வருகிறார்கள். டிட்டோவின் கொள்கை — கோட்பாடுகளைக் கோனங்கிகளின் தன்மைக்கேற்ப மாசுபடுத்துகிறார்கள். மாஸ்கோ தாசர்களாக இருக்கும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளும் டிட்டோவை திரிபுவாதக் கொள்கைக்காரர் என்று விளக்கி மதிப்பிடுகிறார்கள். எனவேதான் தங்களுடைய எஜமானர்களின் 'எதிரி'யை - மார்ஷல் டிட்டோவை, மறந்துவிட்டு, அமெரிக்காவிலிருந்த மிகோயானுடைய செய்திகளையே அதிகமாகவும் விரிவாகவும் 'ஜனசக்தி' இதழ்களில் நிரப்பிக்கொண்டிருந்தார்கள்!

டிட்டோ அவர்களுக்கும் மாஸ்கோவிற்கும் ஏற்பட்ட மனத்தாங்கலைப் பற்றி விவரிக்கவும்.

மார்ஷல் டிட்டோ உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளையெல்லாம் கட்டுப்படுத்தும் மாஸ்கோ காமின் பாரத்தை மதிக்காதவர். இரண்டாம் உலகப்போரின் முடிவிலேயே அவர் யூகோவின் அரசியலின் சிற்சில சொந்தக் கொள்கைகளை உருவாக்கினார். 1948 ல் அவர் நேரடியாகவே ஸ்டாலினை எதிர்த்தார். ரஷ்யாவின் கட்டளைகளுக்குத் தலைவணங்கத் தயாராக இல்லையென்றார்! மார்க்சியத்தை, லெனின் தத்துவத்தை மாஸ்கோத் தலைவர்கள் தவறாகப் பயன்படுத்துவதாகத் தன் கண்டன உரைகளைத் தந்தார்! எனவேதான் மனத்தாங்கல் ஏற்பட்டது. ஸ்டாலினுக்குப் பிறகும் மார்ஷல் டிட்டோ மன உறுதியுடன் இருந்தார். குருச்சேவ் ஆதிக்கத்திற்கு வந்தவுடன் அவரையும் எதிர்க்கவேண்டிய பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ரஷ்ய உதவிகள் ரத்து செய்யப்பட்டன; யூகோ செல்ல விரும்பிய முடிவுகளைக்கூட மாஸ்கோ வீரர்கள் முறித்துக்கொண்டார்கள்! யூகோ நாட்டு பெடரல் சட்ட சபையில் மார்ஷல் டிட்டோ 1952 துவக்கத்தில் பேசும்போது ரஷ்யாவைப் பற்றிச் சொன்ன கருத்துக்கள் இந்தத்தொடர்பினை விளக்கும்.

"உலகக் கம்யூனிஸ்டு சபையிலிருந்து நம்மை நீக்கும் வரை நாம் அதற்கு அடிமைப்பட்டுக்கிடக்க வேண்டியிருந்தது. ரஷ்யாவைப் பற்றி நாம் எவ்வளவோ கற்பனை செய்துகொண்டிருந்தோம். ரஷ்ய மாயை நம்மைப் பிடித்துக்கொண்டிருந்தது. ரஷ்யாவில் என்ன என்ன செய்யப்பட்டதோ, அவை அனைத்தையும் அவர்கள் எப்படிச் செய்தார்களோ, அப்படியே இங்கும் செய்யவேண்டியவர்களானோம். நம் நாட்டு நிலைமைக்கு ஒவ்வாதவைகளையும் செய்தோம். சொந்த மூளையை உபயோகிக்க இயலவில்லை. ரஷ்யாவில் தயார் செய்யப்பட்ட ரெடிமேட் திட்டங்கள் நம்மீது திணிக்கப்பட்டன. நாமும் சுய சிந்தனையை இழந்து, சுய முயற்சியற்று ரெடிமேட் திட்டங்களையே பெரிதும் விரும்பி ரஷ்யாவில் இருந்து அவற்றை இறக்குமதி செய்துகொள்ளவே விரும்பினோம். ரஷ்யாவின் பேச்சுக்குச் சிறிதளவு எதிர்ப்புக்கூட இல்லை" - இந்த நிலைமை இப்போது டிட்டோவுக்கு இல்லையென்றாலும் பல நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த வகையில்தான் செயல்படுகின்றன. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களும் பேசினால், உண்மையைச் சொன்னால் தங்களின் மாஸ்கோ விசுவாசத்தை நிச்சயம் ஒப்புக்கொள்வார்!

★

சு. ஆறுமுகன், கணபதி, கோவை-6.

இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும் ரஷ்யக் கம்யூனிஸ்டுகளுக்கும் கொள்கையில் முரண்பாடா அல்லது வேறுபாடா? ஏதாவது தொடர்பு உண்டா? விளக்கம் தேவை.

மேலேயுள்ள டிட்டோவின் பொன்மொழிகளைத்தான் உங்களுக்குப் பதிலாகத் தர விரும்புகிறேன். தோழர் அஜய்கோஷ் - ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு எழுதிய பதில் மடலில் டிட்டோ சொன்ன வார்த்தைகளையே சொல்லியிருக்கிறார். ரஷ்யாவின் நோக்கமும் போக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு வழிகாட்டியாகும்! இவர்களுக்கென்று தனியான கொள்கை அமைப்பு இருந்தால்தானே, அது முரண்பாடா வேறுபாடா என்று காணமுடியும்! மாஸ்கோவின் கார்பன் காப்பிகள், மாஸ்கோவின் ஒலிபெருக்கிகள், கிராமபோன் இசைத்தட்டுக்கள் என்றெல்லாம் கம்யூனிஸ்ட்கள் விருதுகள் பெற்றது இதனால்தான்! இல்லையென்று மறுக்கிற கம்யூனிஸ்ட்கள் இருந்தால் தெரிவியுங்கள்!

★

எம். ஆர். சேகர், பாளையம், சேலம்.

'ஜனசக்தி'யில் எந்தப் பக்கம் புரட்டினாலும் தி. மு. கவின் பெயரே இருக்கிறதே. ஏன்?

கழகத்தின் வளர்ச்சியில் அந்தப் பத்திரிகையாளர்களின் அரசியல் வாழ்க்கை தளர்ச்சி பெற்றுவிட்டது. அதிர்ச்சியடைந்து எழுதுகிறார்கள்.

1952 பொதுத் தேர்தலில் பொதுவுடைமைக் கட்சி பெருவாரியாக வெற்றிபெற்று 1957-ல் படுதோல்வி அடைந்த மர்மம் என்ன?

1948-லிருந்து கம்யூனிஸ்ட்கள் மர்மக்கதைகளில் வரும் நிகழ்ச்சிகளைப்போலவே அரசியல் 'அண்டர் கிரவுண்ட்' செயல்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். தடிதூக்குவதும் வெடிவைத்து விளையாடுவதும் போன்ற தெலிங்கானா 'வீரச் செயல்'களுக்காக சர்க்காரின் அடக்குமுறையிலே சிக்கினார்கள். எதிர்க்கட்சிகளின் அன்பையும் அனுதாபத்தையும் பெற்றார்கள்! '52 தேர்தலில் திராவிடர் கழகத்தின் பெருந்துணையைப் பெற்று, காங்கிரஸ் கட்சியினை எதிர்த்து வெற்றியும் பெற முடிந்தது! திராவிட முன்னேற்றக் கழகத்தின் நேரடியான எதிர்ப்பில்லை. ஆனால் 1957 தேர்தலில் தமிழ்நாட்டிலும் கேரளம் தவிர்த்த பிற பகுதிகளிலும் தலைகுப்புறக் கவிழ்ந்தார்கள், கொள்கையைச் சொல்லாமல் அடக்குமுறைக் கொடுமையைச் சொல்லி ஓட்டு வாங்க வசதியில்லை. கேரளத்தில் தப்பிப் பிழைத்தார்கள் பிரஜா சோசலிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் செய்த பெரும் தவறுகளினால்!

★

பறம்பை-பிரகாசம், பரமக்குடி.

முன்பு பாதாள வாசம் செய்தார்களே பொதுவுடைமை வாதிகள்—அப்போது திரு. பி. இராமமூர்த்தி மதுரை இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்திலும் வைத்தியநாத ஐயர் வீட்டிலும் ஒளிந்திருந்தாராமே! உண்மையா?

மாஜி போலிட்பீரோ வீரரைப் பற்றிய இந்தச் செய்தி பல நாட்களாகவே இருக்கிறது. இதனை திரு. முத்துராமலிங்கர் 1953-ல் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திலும் சொன்னார்! வைத்தியநாதய்யர் வீட்டிலிருந்துதான் அவருடைய காரிலேயே ராமமூர்த்தி தஞ்சை மாவட்டத்தில் கொண்டு போய் விடப்பட்டார் என்றும் உ. மு. ரா. சொன்னார்! இது பொய்யென்றால் கம்யூனிஸ்ட் கட்சியும் ராமமூர்த்தியும் கண்டன உரைகளுடன் மறுத்திருக்க வேண்டும். "தென்றல்" முன்பே ஒரு முறை கம்யூனிஸ்ட்கள் நல்ல சமாதானம் சொல்ல வேண்டும் என்று கேட்டுள்ளது! ராமமூர்த்தியும் மற்றவர்களும் எதுவும் பேசவில்லை. உண்மையென்று ஒப்புக்கொள்கிறார்கள் என்றே நாம் எண்ண வேண்டியுள்ளது! நீங்கள் இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தையும் சேர்த்துக் கேட்கிறீர்கள்-நான் இதனை 'ஜனசக்தி'க்குத் தெரிவிக்கிறேன். பதிலை எதிர்பார்ப்போமாக!

★

வ. சின்னத்தம்பி, தொளார், விருத்தாசலம்.

ஒரு தோழர் தி. மு. கவை முதலாளிக் கழகம் என்றும் கம்யூனிஸ்ட் கட்சியை ஏழைகள் கட்சியென்றும் சொல்கிறார். இது சரியா?

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கம்யூனிஸ்ட்கள் முதலாளிகள் கழகம் என்று கருதுவதற்குச் சரியான காரணம் எப்போதும் சொல்லமாட்டார்கள்; ஆனால் அவர் காரில் போகிறார், இவர் மாடியில் தங்குகிறார், எனவே கழகத்திலே முதலாளிகள் அதிகம் என்பார்கள்! கே. டி. கே. தங்கமணி, மோகன், ஆந்திர நாட்டு ராஜேஸ்வரராவ் போன்றவர்களையெல்லாம் குறிப்பிட்டுக் கேட்டால், இவர்கள் எல்லாம் கட்சிக்குப் பணம் கொடுத்துவிட்டார்கள்; எனவே முதலாளிகள் அல்ல என்றும் சமாதானம் கூறுவர்! தொழிலாளர்களுக்காக முதலாளிகளிடத்தில் தூது போவதுபோல நடிப்புக் காட்டி ஒப்பந்தங்களை நீட்டி, அவர்கள் கரன்சி நோட்டுகளை நீட்டினால் அவைகளையும் தட்டிக்கொண்டு போகக் கம்யூனிஸ்ட்கள் தயங்கமாட்டார்கள். முதலாளிகளுக்கும் அவர்களுக்கும் அவ்வளவு தொடர்பு எப்போதும் உண்டு. இது பொய்யல்ல. பீர்மேடு வட்டம் குமுளிப் பகுதித் தோட்டங்களில் கம்யூனிஸ்டுகளின் அரசியல் வாழ்வு இருக்கின்ற வகை இப்படி!

★

ஆத்தூர் அன்பு, திருச்சி.

ஜனசக்தியார் 'கேரளாவில் அராஜகமா' என்று புத்தகம் வெளியிட வேண்டிய கட்டாயத்திற்கு இணங்கியிருக்கிறார்களே. ஏன்?

'ஜனசக்தி'யின் சொந்தச் சரக்கல்ல அது; திருவனந்தபுரம் மத்தியக்கமிட்டித் தீர்மானங்களை இவர்கள் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள்! தொழிலாளர்கள் சுட்டுத்

— 11-ம் பக்கம் —

தோழர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, தென்றல் 1958 பொங்கல் மலரில் வெளியான **அண்ணா** அவர்களின் படமும், 1959 பொங்கல் மலரில் வெளியான **எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர்., கண்ணதாசன்** ஆகியோர் இணைந்த படமும் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளன. வேண்டும் தோழர்கள் அஞ்சல் செலவு உள்படக் கீழ்க்கண்டபடி அஞ்சல் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க:

அண்ணா படம் ... 31 புதிய காசுகள்

**எம். ஜி. ஆர்.
எஸ். எஸ். ஆர்.
கண்ணதாசன் } 31 புதிய காசுகள்**

விற்பனையாளர்கள், தேவையானவற்றிற்குக் கழிவு 6 காசுகள் நீக்கி பிரதி ஒன்றுக்கு 25 காசு வீதம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

பொறுப்பாளர்,
"தென்றல்"

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 | 7—2—59 | இதழ் 34

நகராட்சித் தேர்தலில்....

பூங்காக்கள் அமைத்தல், சாலைகள் சமைத்தல், பள்ளிகள் நிறுவுதல், விளக்குகள் ஏற்றுதல், மருத்துவ மனைகள் கட்டல், குடிநீர் கொணர்தல்-இன்னபிறவற்றை இனிதாய்க் கண்டு ஊர் நலம் பெருக்குதலே நகராட்சி மன்றங்களின் கடன்கள் எனக் கருதுவர் பெரியோர். நாமும் அந்த நல்ல பணிகட்குத்தான் நகராட்சி வேண்டும் என்றே கருதுகிறோம் ஆனால்...

வேண்டியோர்க்குக் குத்தகைகள் தரவும், விரும்பியோர்க்கு வரவேற்பு அளித்துப் பொன்மாரி பொழியவும், தம் நிலையை ஏழையர் வரிப் பணத்தின்மூலம் உயர்த்திக்கொள்ளவுமே நகராட்சியைப் பயன்படுத்திக்கொள்ளும் தீய நினைப்பினரும் இருக்கத்தான் செய்கின்றனர். அந்தவகை அரசியல் வாதிகளுள் காங்கிரசார் தலைமையிடம் பெறுகின்றனர்.

கோபி மாநாட்டில் கூடி அன்னார் பேசிய பேச்சுக்கள் வெறும் வேடிக்கைக் கூத்தாகவே ஆகிவிட்டன. மாநாட்டை நாடக மேடையாக்கியதோடு தாமும் நடிகர்களாகிவிட்டனர். காங்கிரசார் தம் இயக்கத்தின் சார்பில் நகராட்சித் தேர்தல்களில் போட்டியிடப் போவதில்லை எனப் பேசிய அமைச்சர் பெருமக்கள், அண்மையில் மறுபடியும் கூடினர்; இயக்கத்தின் சார்பிலேயே போட்டியிடப் போவதாகக் கூறினர். இது, "குட்டித் தேவதை"களின் அழியா "நாநய"த்திற்கு ஒரு சான்று!

சில காலத்திற்குமுன் ஆச்சார்யா கிருபளானி என்ற வடவர்க்குப் பெங்களூர் நகராட்சியினர் வரவேற்பு ஒன்று தர, அதுபோது பேசிய அவர் "நகராட்சிகளில் அரசியல் கட்சிகள் போட்டியிடல் கூடாது; தவறு !" என்றார். ஆனாலும், தம்முன்னாள் தோழரின் பொன்னான பேச்சை மூலைக்குத் தள்ளிவிட்டனர், காங்கிரசார்.

நமது கழகமும் பன்முறை வலியுறுத்தி வலியுறுத்திச் சொன்னது, அதே கருத்தை. ஆனாலும் "சென்னை ராஜ்யக் காங்கிரசார்" தம் போக்கிலேயே செல்கின்றனர். நிலைமை சிக்கலான இந்நேரத்தில் நம் பணியும் முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டியதாகிவிட்டது.

நாமும் நமது கழகத்தின் சார்பிலேயே நகராட்சி மன்றத் தேர்தலில் பங்குகொள்ளுகிறோம். கழகத் தோழர்கள் சலியாத ஆர்வத்துடனும் பிறழாத நெறியுடனும் உழைத்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வாகை சூட வேண்டியுள்ளனர்.

வேறு பலருக்கு நகராட்சி மன்றங்கள் விருந்து மண்டபங்களாக வேட்டைக் காடுகளாகத் தெரியலாம். ஆனால் நாட்டு நலன் நாடுவோர்க்கோ அவை தொண்டு நிலையங்கள்; தூய பணிக் கூடங்கள்,

மறு முறையும் சொல்கிறோம்..

நம் நோக்கில் நகராட்சி மன்றங்கள் ஊராரின் நன்மைக்கே; வரி தருவோரின் நல்வாழ்வுக்கே !

நம் நோக்கங்கள் நகர் நலமும் மக்கள் வளமும் தாம் !

அப்பணியில் நமக்குத் துணை நிற்பன தொண்டுள்ளமும் நேர்மைப் பாதையும் தாம் !

பெரியார் பொன்மொழி

பிறப்பதும் இறப்பதும் இயற்கை—புவி
பிறந்த நாள்முதல் தினந்தினம் உயிர்கள்
பிறப்பதும் இறப்பதும் இயற்கை!

ஒருநாள் பிறந்தவன் நூறாண்டு வாழ்வது முண்டு—அந்த
ஒருநாள் இருந்தவன் வாழாமல் இறப்பது முண்டு.
திருநாள் பெருந்தினம் காணாமல் வாழ்வது முண்டு—தினந்
தினமே நலங்கண்டு திடுமென்று சாவது முண்டு!

காட்டு மலர்ச்செடி பூத்துக் குலுங்குவ துண்டு—புயற்
காற்றில் அடிபட்டுச் சாய்ந்து மடிவது முண்டு
வீட்டுப் புறக்கொல்லை மேட்டில் படுத்துள்ள நாயும்—இந்த
விதிக்குப் புறம்பில்லை; நிலைத்த பொருளில்லை எங்கும் !

பெரியார் கழகத்தில் புகுவார் பலப்பலர் உண்டாம்—வாய்
பேசாம லேவெளி வருவார் அடிக்கடி கண்டோம்
சரியாய் இருந்தவன் நெறியாய் வாழ்ந்தவன் எல்லாம்—பெருஞ்
சதிகார னாகி மரியாதை மீறி வருவான் !

இருப்பவர் போவதும் புதியவர் நுழைவதும் கண்டு—மனம்
எதற்குங் கலங்கா திருப்பவர் ஒருவரே யுண்டு.
பொறுப்புடன் ரோக்க இருப்புடன் இருப்பவர் ஒருவர்—அவர்
பொல்லாத சீடர்கள் எல்லாருக்கும் ஒரே தலைவர் !

புதியன புகுவதும் பழையன கழிவதும் நன்றே—இந்தப்
புல்லர்கள் செல்வதும் நல்லவர் வருவதும் நன்றே
அதிசயப் பொன்மொழி நிதநிதம் சொல்லுவீர் ஐயா—வந்த
அடியவ ரெல்லாம் கொடியவ ராவது சரியா ?

பிரிப்பதும் கலைப்பதும் கட்சிக் குள்ளேயே இருந்தால்—தினம்
பேசும் பிரிவினைத் தேசம் பெறுவதும் வருமா ?
அடிப்படை சரிப்பட அமைந்திட விலையெனக் கண்டால்—தினம்
அயரா துழைப்பதில் பயன்யாது முண்டா ? உண்டா ?

—நாரா நாச்சியப்பன்.

2. எழுசீர் விருத்தம்.

ஓர் அடி :

"காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணும் துளைத்தன நெஞ்சை"

முடிவு தேதி: 21-2-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

வாழ்க்கை இருவருக்கே!

வந்திடடி எந்தன் வீடு!

வீடுகதைகளைப் 'பிசி' என்றும், நாட்டுப்பாடலைப் 'பண்ணத்தி' என்றும் பெயரிட்டு, தொல்காப்பிய காலத்தில் வழங்கியதாக நூல்களில் கூறப்படுகிறது. ஏர் உழும்பொழுதும், நாற்று நடும்பொழுதும், களை பறிக்கும்பொழுதும், கிராம மக்களின் ஆனந்தப் பெருக்கில் முற்றி உதிரும் இக்கவிதைக் கனிகள் ஏட்டில் இடம் பெறுமல் மறைந்து வருகின்றன. நாட்டுப் பாடலுக்கும் கவிஞர்கள் வழங்கும் கிராமியக் கவிதைக்கும் பிளவு உண்டு. இரண்டையும் இனங் கண்டு நுகரும் தன்மை வாய்ந்தவர்கள் எளிதில் அறிவர்.

வெய்யவன் இட்ட இறுதி முத்தத்தால் செவ்வானக் கன்னி கன்னத்தில் செந்தூரம் படர நாணிச் சிரிக்கிருள். சலசலக்கும் வையையோ தன் தங்கை முல்லையுடன் கைகோத்துக் கொண்டு வார்த்துவிட்ட வெள்ளிக் கம்பியாக வளைந்து நெளிந்துபுரண்டு, தன் காதலன் கடலரசைக் காணத் துடித்தபடி ஓடிக்கொண்டிருந்தாள். அந்தி மந்தார ஒளியில் சிதறும் நுண்ணிய மஞ்சள்பொடியில் குளித்துக்கொண்டே வருகிருள் மங்கை ஒருத்தி. பட்டுப் பாதங்கள் மணலில் புதையப் புதைய, கைவீசி மெட்டி குலுங்க அவள் வரும்பொழுது கொள்ளை அழகு திணிக்கப்பட்டுள்ளது. முன்செல்லும் குட்டி அலைகளை வாரி அணைப்பதுபோல் பின்செல்லும் சிற்றலைகள் தாவிக் குதித்தோடும் பொழுது துள்ளித் தெறிக்கும் நீர் முத்துக்கள் தூவானம் பொழிகின்றன. தூவானக் குளிரில் சிலிர்த்து கரையோரம் மண்டிக்கிடக்கும் கோரைப் புற்களும், பொடிமணல்களும் கட்டிப் புரளுகின்றன. பூரித்துச் சிரிக்கும் கோரைப்புற்களைப் பொற்பாதங்களால் நசுக்கியபடி ஆடைகளைக் களைந்து, சிற்றுடை மட்டும் உடலில் புரள நீரில் இறங்குகிருள் எழிலே உருவெடுத்த அந்தக் கன்னி.

பருவம் விளையாடும் தளிர்மேனியில் கண்ணுடித் தண்ணீரை மருதாணிக் கைகளால் அள்ளி ஊற்றுகிருள். 'தண்'ணென்ற நீர்பட்டவுடன் இன்பம் நிறைந்து அவள் செஞ்சம் விம்முகிறது. மஞ்சள் வெயிலில் மினுக்கிக்கொண்டு ஓடும் வையை நீர்ப்பிரவாக எழிலை அவள் பம்பரக் கண்கள் ரசித்துக் குடிக்கின்றன. பம்பரக் கண்களையும், சிற்றுடை நனைந்து உடலில் ஒட்டியபடி பொன்னிறம் ஒளிவீச வனப்பு வழியும் எழிற் கோலத்தையும் செவ்வானம் மட்டும் காணவில்லை. மண்வெட்டியும் கையுமாக வந்த இளைஞன் ஒருவனும் அவள் எழிலில் மயங்கிச் சிலையாகி விட்டான். அவன் இதயம் இந்த "'வெல்லக்கட்டி' எனக்கே உரிமையாகக் கூடாதா?" 'என்று குமைகிறது. அவனுள்ளிருந்து ஏக்கப் பெருமூச்சுடன் இனிய கீதமும் கிளம்பி ஆற்று வெளியில் படருகிறது.

ஓடுகிற தண்ணியிலே
ஆடுகிற பம்பரமே
பம்பரத்தை நம்பியல்லோ
வெம்பரம்பா ஆகுரேனே.

"பம்பரத்தின் எழிலை விழியில் தேக்கி, ஓடும் தண்ணீரில் நீராடும் அழகுச்சிலையே! என் உணர்வில் நீ கிடைப்பாய் என்ற நம்பிக்கை முளைவிடுகின்றது. காய்ந்த கரடுமுரடான பொட்டல்காட்டில் அடிக்கும் பரம்புக்குக் காயங்கள் உண்டாவது போல் உன்னை நினைந்துருகும் என் இதயத்தில் காயம் உண்டாகி விட்டது" என்னும் பொருளைப் பாடலிலிருந்து விண்டு அவள் இருக்குமிடம் சுமந்து செல்கிறது தென்றல்.

தன்னைக் குறித்துப் பாடுபவனைப் பார்த்துவிடுகிருள். அவளை நாணம் சூழ்ந்துகொள்கிறது. சிட்டுப்போல் ஓடிவந்து புடவையைக் கட்டிக் கொண்டாள். கன்னங்கரிய அளக பாரத்தை நீவிக் காற்றிலே காயவிட ஆரம்பித்தாள். கடைந்தெடுத்த கைகளால் கூந்தலை நீவிக்கொண்டே சிலேடையாகப் பாடுகிருள்.

காக்காய் இறகுத் தண்ணி
கல்லாற்று முல்லைத்தண்ணி
மறித்தால் மறிபடாது
மகாலிங்கம் பொய்கைத்
தண்ணி

தெள்ளிய நீரை 'காக்காய் இறகு போன்ற நீர்' என்று கிராம மக்கள் சொல்வர். அத்தகைய நீர்போன்ற நான் உனக்குக் கிடைக்கமாட்டேன் என்பது பாடலின் பொருள். 'மறித்தால் மறிபடாது' என்ற வார்த்தைகள் இளைஞனுக்கு ஆத்திரத்தை மூட்டுகின்றன. வரட்டும்; மறித்தே பார்த்துவிடுவோம் என்று கருவியபடி நிற்கிருன். அவளோ நன்ருகக் காய்ந்த தலைமுடியை கொண்டையாக அள்ளிச் செருகுகிருள். செருகிய கொண்டையில் நூற்றுக்கணக்கான பூக்கள் நிறைந்த குண்டுமல்லிகைச் சரத்தை வைத்துக்கொண்டு வருகிருள். அவனே, தான் நெடுநேரம் கவனித்ததை உணர்த்த வேண்டுமென்றே பாடுகிருன்.

ஆற்றிலே தலைமுழுகி
அயிரைக்கண்ணு பட்டுடுத்தி
சாற்றினுள் தலைமுடியில்
நூற்றியொரு பூமுடியை

நீ உடுத்திக் குளித்த ஆடை நனைந்ததால், உன்மேனி வனப்பைக் காணும்படி அயிரைமீனின் கண்ணளவு சல்லடைகள் நிறைந்த சல்லாப்பட்டுப்போல் தோன்றியது. என்று அவள் காதில் விழும்படிப் பாடுகிருன்.

அவள் நெருங்கிவிட்டாள். குமின் சிரிப்பு அவள் மாதுளை இதழ்களில் கொஞ்சிக் கொண்டிருக்கின்றன. கங்குல் பரவும் காதலர் நேரம். 'சில்' வண்டுகளின் மெல்லிய இசை. பக்கத்தில் பூவையும் பிஞ்சையும் சுமந்தபடி நிற்கும் சூலுற்ற மாமரங்கள். மரங்களினடியில் செறிந்து வளர்ந்துகிடக்கும் அருகம்புல் மெத்தை. சூழ்நிலையில் அவன் தன் நினைவின்றித் தவிக்கிருன். அவன் கரங்கள் அவள் வளைக்கரங்களைப் பற்றி விடுகின்றன!

அவள் 'வெடுக்'கென்று திமிறினுள். வளையல்கள் தூள்தூளாகச் சிதறியது. 'வாலைக்குமரியின் கையைப் பிடிக்க உனக்கு எவ்வளவு திமிர்?' என்று சீறுகிருள். சீறிவிட்டு நடந்த அந்தக் கன்னி கேவிக் கேவி அழ ஆரம்பித்து விட்டாள்.

இதன் பின்னர் அந்தக் கன்னியின் இதயம் நெகிழ்ந்து எண்ணத்திலும் இதயத்திலும் இடம் கொடுத்து விட்டாள். அன்றிலிருந்து அவள் விழிகளில் அவனைக் காணவேண்டுமென்ற ஏக்கம் அடிக்கடி தோன்றி மறைகிறது. அவனே அன்றிலிருந்து ஆற்றுப்பக்கமே வருவதில்லை.

ஆனல்...!

அவளுக்குச் செய்தி மட்டும் அனுப்பத் தவறவில்லை. ஓடுகிற தண்ணீரில் எழுதிய எழுத்தைப் போல் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக உலகறியாச் சிறுவன் ஒருவனிடம் வயல் வேலைகள் அதிகமாக உள்ளது என்று சொல்லிவிடுகிருன். அந்தச் சிறுவனே இவர்களுக்கிடையிலுள்ள உறவை வளர்க்கிருன்.

திடீரென்று தன் உள்ளம் கவர்ந்தவனை ஆற்றுக்கரையில் நேரடியாகக் கண்டுவிடுகிருள். பெண்களும் சிறுவர்களும் ஆற்றில் கும்மாளமடித்துக் குளித்துக் கொண்டிருக்கின்றனர். உடற்பசியால் ஆற்றங்கரையை வட்டமிடும் ஒன்றிரண்டு கழுகுக் கண்கள் அவளையே துருவிக்கொண்டிருக்கின்றன. எப்படிப் பேசுவது? அதனுல் பாடுகிருள்.

ஓடுகிற தண்ணியிலெ
உரசிவிட்டேன் சந்தனத்தை
சேந்துச்சோ சேரலியோ
சிவத்தமச்சான் நெற்றியிலே

"வீட்டுக்கு வரும்படிப் பொடியனிடம் சொல்லிவிட்டேனே. அவன் சொன்னுனு?" என்ற கேள்வி பாடலில் மணமெழுப்புகிறது. அவன் பதிலுக்குப் பாடுகிருன்.

வெள்ளியிட்ட ஆயுதத்தை
விதியிலே சாத்திவச்சு
கள்ளிதலை வாசலிலே
காத்திருந்தேன் வெகுநேரம்

"தற்காப்புக்காகக் கொண்டு வந்ததும் 'பளபள'வென்று தீட்டியதால் வெள்ளி பூசியதுபோல் மின்னும் வேல்கம்பை வீதியிலே சாற்றிவைத்துவிட்டு என் உள்ளம்கவர்ந்த கள்ளிக்காக வாசலில் வெகுநேரம் காத்திருந்தேன். அவள் வராதது ஏனே?" என்ற கேள்வி அம்பு, பாடல்மூலம் அவளை நோக்கிப் பாய்கிறது. அவள் பாடுகிருள்.

அப்பன் படுத்திருந்தார்
ஆத்தாள் விழித்திருந்தாள்
மருதமர ஓரத்திலே
நாளைவாங்க நேரத்திலே

காதில் தேனுக வந்து ஒழுகிய இந்த இன்னிசையைப் பருகிவிட்டு அவன் செல்கிருன். அவன் இதயமோ மறுநாள் பொழுதை எப்படி விரட்டுவது என்று ஏங்குகிறது. நாளைக்கும் எதுவும் தடங்கல் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் வேறு சாகடிக்கின்றது.

மறுநாள் வெண்மதி பால்ஒளியைத் தெளித்துச் சிரித்துக்கொண்டிருக்கிருள். மருதமர ஓரத்தில் எதையோ பார்த்த தண்மதி வெட்கிப்போய் முகத்தை மேகத்திரைக்குள் புதைத்துக்கொள்கிருள். மருதமரத்தடியில் வளையல்கள் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கின்றன. இளைஞனின் மடியில் அவள் முல்லைக்கொடியாகத் துவழ்கிருள். அந்த நிலையிலும் அவன் நெஞ்சில் புதைந்துகொண்டு விசித்துப் பொறுமுகிருள். ஈரம் விளையாடும் அவள் குருத்திதழ்கள் மெல்ல விரிந்து 'என்னை எப்பொழுது கல்யாணம் செய்துகொள்ளப்போகிறீர்கள்' என்று கெஞ்சுகிறது. தேனில் குழைத்த அவள் வார்த்தைகள் தினைமாவில் பிசைந்து தென்றலில் குளித்து அவன் இதயத்தில்விழுந்து அவனேடு கலக்கிறது. இதைக்கேட்ட அவனுக்கு நாளமெல்லாம் ஆனந்தம் பெருகித் தெறிப்பது போலுள்ளது. அவளை அப்படியே வாரியெடுத்து பட்டுக் கன்னங்களைக் கிள்ளுகிருன். செல்லமாகக் கிள்ளிவிட்டுக்கொண்டேசெவிகளில் ரகசியமாகப் பாடுகிருன்.

ஏலரிசி கூட்டுக்குள்ளே
என்னுயிரு ஒன்னுக்குள்வே
வாழ்க்கை இருவருக்கே
வந்திடடி எந்தன்வீடு!

—கே. இராமலிங்கம்.

திருக்குறட் கழகம்

திருக்குறட் கட்டுரை, கவிதை, நாடகப் போட்டிகள்

மேற்படி போட்டிகளில் கல்லூரி மாணவ மாணவியர் கலந்துகொள்ளலாம். பரிசுகள் பல உண்டு. போட்டி இறுதி நாள் 16-2-'59. போட்டிக்கான விவரங்களையும் விதிகளையும்

செயலாளர்,
திருக்குறட் கழகம்,
நவயுகப் புத்தகாலயம்,
காரைக்குடி

என்ற முகவரிக்கு எழுதி அறிக.

அவர் காணும் நாடு!

நாடு என்றால் என்ன?

நிலம்.

மக்கள்.

அரசு.

அரசாங்கம்.

இவையனைத்தும் பெற்றதே ஒரு தனி நாடு என்று அரசியற்கலை அறிஞர்கள் கூறுவார்கள். இந்தக் கருத்தைச் சிறிது கூர்ந்து கவனிக்க வேண்டும். மக்கள் இல்லாத நிலப் பரப்பு நாடு எனப்படல் இயலாது. ஒரு குறிப்பிட்ட நாட்டின் சிறப்பு, அந்த நாட்டு மக்கள் தொகை அவர்கள் நிலை ஆகியவற்றைப் பொறுத்ததாகும். இம்முறையில் கூறப்பட்ட நாடு அளவினால் சிறியதாகவோ, பெரியதாகவோ இருக்கக்கூடும். நாட்டில் வாழுகின்ற மக்களின் நன்மைக்காக, மக்களால் விரும்பப்படும் அரசு அந்த நாட்டில் நிலவுதல் வேண்டும். நாட்டையாளும் அரசாங்கம் கோனாட்சியாக விருந்தால் மன்னனாலும், குடியாட்சியாக விருந்தால் குடிமக்களாலும், வழிவழிச் செல்வராட்சியாக விருந்தால் அன்னோரன்ன செல்வராலும், தனி வல்லாட்சியாக விருந்தால் ஒரு தனி மகனாலும், படையாட்சியாகவிருந்தால் படைத்தலைவர்களாலும் நடத்தப்படும். நாட்டில் அமைதியை நிலைநாட்டிக் குடிகளின் உயிரையும், உடைமையையும் பகை, பசி, பிணி முதலியன களைந்து பாதுகாத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வது அரசாங்கத்தின் கடமைகள்; அரசாங்கம், ஒரே வகையாகவோ, குறிப்பிட்ட ஒருவரிடமோ சிலரிடமோ இருக்கவேண்டும் என்பதில்லை. அரசாங்கத்தின் அமைப்பு முறை மாறலாம். எவ்வாறாயினும் நாட்டில் ஒரே ஒரு அமைப்பு முறை இருக்கவேண்டும்.

ஒரு நாடு, தன்னுரிமை பெற்ற தன்னெல்லைக்குள், தன் அரசாங்க ஆணைக்குப் போட்டி இருத்தல் கூடாது. பிறநாட்டினரின் தலையீட்டுக்கோ, கட்டளைக்கோ, உட்பட்டு இருத்தல் கூடாது. இத்தகு வியல்புகள் பெற்ற நாட்டையே ஒரு அரசு என்பர் அரசியற்கலை வல்லுநர்கள்.

ஒரு குறிக்கோள் - வாழ்க்கை கொண்டதும் எல்லோராலும் விரும்பத்தக்கதும் ஆகிய நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்று பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

நம் நாட்டிலும், நாடு எவ்வாறு இருக்க வேண்டும், வேந்தன் எத்தகையோனாக விருத்தல் வேண்டும், ஆட்சி எத்தகையதாயிருக்க வேண்டும், நாட்டு மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று ஒரு பேரறிஞர் எடுத்துக் கூறியிருக்கின்றார். அவர் காணும் நாட்டின் நோக்கங்களையும் பண்புகளையும் ஆராயும்பொழுது இந்த நூற்றாண்டில் அரசியல் அறிஞர்களால் புதியன போன்று கருதப்படும் கருத்துக்களையும் அவர் விதந்து கூறியிருப்பது நம்மையெல்லாம் வியப்புக்குள்ளாக்கும்.

அவர் காணும் நாடு, குறைந்த முயற்சியினாலேயே நிறைந்த பயனை விளைவிக்கக்கூடிய இயற்கை வளம் மிக்க நாடு. சிலவிடங்களில் நாற்பது அடி ஆழத்தில் நீர் இருக்கிறது. அந்த நிலையில் உள்ள கிணறுகளே நாடெங்கும் காணப்படுவதாகக் கொண்டால் அந்த நாடு நல்ல விளைவுளை எவ்வாறு தருதல் கூடும்? அந்த நாட்டு மக்கள் எவ்வாறு நிறைந்த வாழ்வு பெறமுடியும்? அந்த நாட்டு வாழ்க்கையமைப்பு சிறந்தது என்று எவ்வாறு கூற முடியும்? அவ்வாறாயின் ஒரு நாடு எவ்வண்ணமிருக்க வேண்டும்? வேலி ஆயிரம் விளைவு கொண்ட நாடாகவும் பெண் யானையொன்று படியும் சிற்றிடத்தில் ஏழு ஆண் யானைகளைக் காக்கத்தக்க வளம் மலிந்த நாடாகவும் அளவில் சிறியதேயாயினும் விளைவினால் மேம்பட்ட பொருள்களைத் தரும் வளம் நிறைந்த நாடாகவும் இருத்தல் வேண்டும். மேலும், எப்பொழுதும் புது வருவாய் கிடைக்கக்கூடிய நிலையினதாகவும் வேண்டிய பொருள்களை வேண்டியாங்கு மக்களுக்குக் கொடுக்கும் திறம் பெற்றதாகவும் அப்படிக் கொடுப்பதன் வாயிலாக வளம் குறைந்து விடாததாகவும் அந்நாடு விளங்க வேண்டும். அத்தகைய நிலப்பரப்பினையே புலவர் பெருமக்கள் வளமிக்க நாடெனக் குறிப்பர். இவ்வளவு இயல்புகளையும்

'நாடென்ப நாடா
வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு'

என்று சுருங்க வுரைத்தார் பொய்யில் புலவராய வள்ளுவர் பெருமான்.

இயற்கையின் வாயிலாக ஏற்படும் பெருமழை, பெரு வெள்ளம், மழையின்மை, பயிர்கள் அழிந்துவிடுதல் போன்ற தீமைகள் தோன்றினாலும் குறைவுபடாத வாரிதியன்ன வளம் பெற்றிருத்தல் வேண்டும். போரின் பயனாகத் தீமைகள் சில தோன்றினாலும் விளைவிற் குன்றாது வளர்ச்சி பெறுதல் வேண்டும். அந்நிலையில் தான் நாட்டின் தேவைக்குப் பயன் பட்டது போகவும் எஞ்சியுள்ள விளைபொருள்கள் மிகுதியாக இருப்பதனால் வேற்று நாடுகளுக்கு அவற்றை அனுப்பி வாணிபத்தைப் பெருக்குதல் கூடும். வாணிபத்தின் வழியாக பெரும்பான்மையான வருவாய் கிடைக்கும். அரசாங்கத்திற்கு பெரிய அளவில் வரிவழி வருவாய் மிகும். மிகுந்த பொருள் வருவாயினால் மக்களின் தேவைகள் நன்கு கவனிக்கப்படும். இந்த நிலைகளையே

'பெரும் பொருளாற்
பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு'

என்று தெளிவாக்குகின்றார்.

நாடு நிலவளம் மட்டும் பெற்றிருந்தால் போதுமா? நிலத்தின் நிலை சிறப்புறுவதற்கு நீர்வளமும் சிறந்திருக்க வேண்டும். மழை பெய்யாது பொய்க்குமாயினும் பெருங்கேடொன்றும் நேராதவாறு செயற்கை நீர்த்தேக்கங்களும், குளங்களும், அணைகளும், போக்குவரவுக் கால்களும் நீர்வளத்தைக் குன்றாதிருக்கச் செய்தல் வேண்டும். அவற்றோடு நன்னீர்க் கேணிகளும் தெண்ணீர்ச் சுனைகளும் நிறைந்து நீர்வளம் கொண்டதாக நாடு இலங்குதல் வேண்டும். இத்தனைக்கும் வாய்ப்பாக அமைந்த மலைகள் வேண்டும். அவை பருவத்திலும் கோடையிலும் குன்றாத நீர்க்கொடை தருவதாக இருத்தல் வேண்டும். அவற்றினின்றும் வருவனவாகிய வான் பொய்ப்பினும் தாம் பொய்யாப் பேரியாறுகளும், சிறு படையிருந்து பெரும்படை தடுக்கும் பெருமை நிறைந்த அரணும் கொண்டதாக நாடு அமைதல் வேண்டும். மலைகளும் அவை சார்ந்த காடுகளும் அரண்களின் பெருங்கூறாக அமைதலின் அவையனைத்தையும் ஒருங்கு சேர்த்து,

'இருபுனலும் வாய்ந்த
மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.'

என்று தொகுத்தோதினார்.

நாடு நிலவளமும் நீர்வளமும் கொண்டதாக மட்டும் இருத்தல் சாலுமோ? அந்த நாட்டில் வாழும் மக்கள் அதன் பழைமை, குடிமை, பெருமை ஆகியவற்றையெண்ணி வாழும் தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். புதுப்புதுப் பொருள்களைத் தக்க முறைகளில் ஆக்கித் தந்து தம் நாட்டிற்கு வேண்டியது போக எஞ்சியிருக்கும் பொருளை அவற்றை வேண்டி நிற்கும் பிற நாட்டாருக்குத் தந்து வாணிபம் செய்யும் திறமையாளரும் வாணிபத்தினால் ஊதியம் நிறையப்பெற்றுப் பெருஞ் செல்வராகியும் தம் தகுதியின் வழாதும், பண்பின் பிறழாதும், தம் தனியுயர்வின் இழியாதும் வாழும் நன்மக்கள் ஒருங்கே சேர்ந்து வாழ்வதே நாடு. இச்சீரிய நிலையினை,

'தள்ளா விளையுளுந்
தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.'

என்று சிறப்பிக்கின்றார்.

அண்டை நாடுகள் பகையினால் மெலிந்து, செங்கோல் தளர்ந்து, வறுமையுற்றவிடத்து, அந்நாட்டினர் தம்மிடம் புகல் வேண்டி நிற்குமிடத்து அவர்களை ஏற்றுப் புரந்து, அவரவர் நாடுகள் நன்னிலையில் இருந்த காலத்தில் அவர்கள் எவ்வாறு வாழ்ந்திருப்பார்களோ அவ்வாறே மகிழ்ந்திருக்கச் செய்யும் ஆற்றலும் அருளும் மிக்கவராக மக்கள் இருக்க வேண்டும். இந்நிலையினும் அரசனுக்குக் குறை தோன்றாதவாறு தாமே செய்யத்தக்கன செய்து, இறைப்பொருள் முழுவதும் உடம்பட்டுக் கொடுக்கும் மக்கள் நிறைந்த நாடாக இருக்க வேண்டும். இதனையே

'பொறையொருங்கு
மேல்வருங்கால்
தாங்கியிறைவற்
கிறை யொருங்கு நேர்வது நாடு!'

என்று கூறுகின்றார்.

சார்ந்தோரைத் தளராது காக்கும் உளமும் வளமும் பெற்றிருக்கின்றமையால் சாதி சமயம்பற்றித் தம்முள் மாறுபட்டுக் கூடும் பல குழுவும், ஆறலைப்பாரும், கள்வரும், குறளை கூறுவாரும் ஆகிய தீயோரும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும் கூடிய உடனுறைந்து பாழ் செய்யும் உட்பகையும், அரசை அலைக்கும் கொல்வினைக் குறும்பரும் ஒழிந்ததே நாடு. இக்கருத்தினையே

'பல்குழுவும் பாழ்செய்யு
முட்பகையும் வேந்தலைக்குங்
கொல் குறும்பு மில்லது நாடு'

என்று தெளிவாக வுரைக்கின்றார்.

இவ்வளவுக்கும் மேலாக, பகைவரால் கெடுதல் அறியாததாக நாடு இருக்க வேண்டும். எப்போதாகினும் கெடுதல் தோன்றுவதானாலும் தன் வளம் குன்றாத தன்மையினைக் கொண்டிலங்க வேண்டும். மாற்றார் படையினைக் கண்டறியாததாகவும், இயற்கை கேடுற்ற விடத்துத் தன்னிறைவு குன்றாததாகவும் இருப்பதே நாடாகும். இத்தகைய தலைமை சான்ற நாட்டினையே

'கேடறியாக் கெட்ட
விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை'

என்று குறித்துப் போந்தனர்.

இன்னோரன்ன பெருஞ் சிறப்புக்கள் நிறைந்த நாடொன்று உளதெனின் அந்நாட்டின் அரசன் குருளையைப் புரந்தருளும் குன்றுறை புலியினைப் போலவும் சேய்நலம் நாடும் தாயினைப்போலவும் குடிகளை அறத்தின் வழாமற் காக்கும் கடப்பாடுடையனாயிருத்தல் வேண்டுமன்றோ? அவன் தன்னுள்ளத்தில் 'மாநிலம் காவல் என் முதுகுடியினது' என்ற பெருமிதத்தனாகவும் 'குடி பழி தூற்றும் கோலேன் ஆகாதிருக்க வேண்டும்' என்று பழி நாணும் உள்ளத்தனாகவும், 'என்னிழல்வாழும் மக்கள் எம்மிறை எம்முயிர் என்று பாராட்டுமாறு வாழ வேண்டும்' என்ற இசை கொண்டு வாழும் எண்ணத்தனாகவும் அமைய வேண்டும். ஆட்சி முறை கோனாட்சியேனும் குடியாட்சியேனும் மக்கள் வாழ்வு வளங் கொண்டதாக இருந்தாலன்றி அந்நாடும் அதன் ஆட்சி முறையும் சிறந்தனவாகக் கருதப்படா; உயிரனைத்துக்கும் வான்றுளி தேவை அவ்வாறே மக்களனைவருக்கும் அருளாட்சி தேவை. இதனையே

'வானோக்கி வாழு
முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி'

என்றார்.

— 8-ம் பக்கம் —

புதுமைக் கலைவிருந்து!

முரசொலி முருகன் நடிக்கும்

முத்தார நாடக மன்றத்தாரின்

★ **தீரன் திப்பு** ★

பவனி வருகிறான், நாடக உருவில்.

விவரங்கட்கு :

முத்தார நாடக மன்றம்,

(மதுரை மாவட்ட தி. மு. கழகப் பணிமனை)

66, மேலக்கோபுரத் தெரு, மதுரை.

கண்ணுத்தாள் கண் விழித்தாலொழிய அவளுக்கு கர்ப்பம் வந்த கதையை யாரும் அறிந்துகொள்ள முடியாது. அதைச் சொல்லக்கூடியவனும் அதற்குக் காரணமானவனும் சிங்கத்தேவன் தான். ஆனல், இந்த நேரத்தில் அவள் முகத்தைக் கூடப் பார்க்கக்கூடாத நிலையில் உள்ளவனும் அவன்தான். வீரத்தேவன் அவமானச் சுழலில் அவதிப்பட்டான். ஊமைத்துரையோ இதுவும் சென்னகேசவ நாயக்கனல் விளைந்ததாக இருக்குமோ என்று எண்ணத் தலைப்பட்டார். வீரத்தேவனுக்கு கண்ணுத்தாள் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. மெதுவாக வெளியிலே வந்தான். வழிநடைக் களைப்பில் அயர்ந்துபோய், அங்கு வெளித்திண்ணையிலேயே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள், அஞ்சுகம். அவர்கள் வந்தது, கதவைத் தட்டியது, கதவு திறக்கப்பட்டது வரைதான் அவளுக்குத் தெரியும். பிறவற்றை அறியமுடியாத அளவுக்கு அவளைச் சோர்வு தள்ளிற்று. அப்பொழுதே படுத்துத் தூங்கிவிட்டாள். பூரி ராமசாமித் தேவர் ஒரு விளக்குக் கம்பத்தில் சாய்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். பெரும்பாலான வீரர்களும் ஊமைத்துரையின் நண்பர்களும் அதே கதியில் இருந்தனர்.

வீரத்தேவன் அவர்களைக் கடந்து சுமார் நூறடி தூரம் வரை சென்று, ஒரு குடிசையின் முன்திண்ணையில் அமர்ந்து கொண்டான். அவனது வீரம் எங்காவது தோல்வியுற்றிருந்தால்கூட அவன் இவ்வளவு வேதனைகளை அனுபவித்திருக்கமாட்டான்! கண்ணுத்தாள் எதையோ மறைக்கிருள்! ஏன் மறைக்க வேண்டும்? அவள் தூக்கிச் செல்லப்பட்ட இடத்தில் கெடுக்கப்பட்டிருந்தால் அதையே தன்னிடம் சொல்லலாமே அவள் விருப்பமின்றி நடந்த காரியங்களுக்கு அவளைக் குற்றவாளியாக்கமாட்டோமே! பின் ஏன் அவள் பொய் சொல்ல வேண்டும்! ஒருவேளை, அவளே மனம் விரும்பி ஓடியிருப்பாளோ! அப்படி ஓடினல் சென்னகேசவ நாயக்கன் வீட்டுக்கு வர வேண்டிய அவசியம் என்ன? — எந்தக் கேள்விக்கும் பதில் புரியாமல் தலையில் கையை வைத்துக்கொண்டான் வீரத்தேவன். இருட்டில் அவன் கண்களுக்கு யாரும் பார்ப்பதற்கில்லை. அதுதான் அவனுக்கு ஓரளவு அமைதியாய் இருந்தது. அவமானம் அவனை அவ்வளவாகச் சிதைத்திருந்தது. பூமியையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். மெதுவாக அவன் அருகில் வந்தார் ஊமைத்துரை. "வீரத்தேவா" என்று அழைத்தார். வீரத்தேவன் நடுக்கத்தோடு எழுந்து நின்றன்.

"மனதைத் தேற்றிக்கொள்! இத்தகைய நேரங்களில் தான் தைரியமாக இருக்க வேண்டும்! பகைவர்களை முழுமூச்சாக எதிர்க்க வேண்டிய நேரத்தில் பலவீனத்துக்கு ஆளாகக்கூடாது! இவ்வளவு காலமும் உன் கண்களுக்குத் தட்டுப்படாமல் இருந்த உன் தங்கை, இன்னும் சிறிது காலத்துக்கு அப்படியே இருந்திருக்கக்கூடாதா! உற்சாகமான நேரத்தில் கடுமையான சோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பது உண்மை! அந்தச் சோதனைகளை எப்படிச் சமாளிப்பது என்பதில் தான் வீரனுக்கும், சாதாரண மனிதனுக்கும் பேதம் இருக்கிறது. மான உணர்ச்சி உன்னை அலைக்கழிக்கிறது! தெரிகிறது எனக்கு! கண்ணுத்தாள் கண் விழித்துவிட்டாள்! இப்பொழுது கண்டித்துக் கேட்டால் முழு விவரத்தையும் அவள் சொல்லிவிடுவாள். அது திருப்திகரமாக இருந்துவிட்டால் கவலையில்லை. உன்னை மேலும் தொல்லைக்குள்ளாக்குவதாக அமைந்துவிடுமானுல், நாம் போய்க்கொண்டிருக்கிற காரியம் கெட்டுவிடும்! ஆகவே, நீ என் அருகிலேயே வா! கண்ணுத்தாளுக்குத் துணையாக அஞ்சுகத்தையும் சுப்பம்மாவையும் விட்டுவிடுகிறேன்! கோட்டை கட்டி முடிக்கப்பட்டு, போரில் நாம் வெற்றி பெறுகிற வரை இதுபற்றி நீ அதிகம் சிந்திக்க வேண்டாம்!" என்றுர் ஊமைத்துரை.

அவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த வீரத்தேவன், தலை குனிந்தபடி அவர் பின்னுலேயே நடந்தான். தூங்கிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் எழுந்து தயாரானுர்கள். சுப்பம்மாளும் அஞ்சுகமும் கண்ணுத்தாளை அணைத்தபடி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்துகொண்டிருந்தார்கள். எதிரே நின்ற சிங்கத்தேவன் கண்ணுத்தாளை ஒருமாதிரியாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அசப்பிலேகூட அவளைப் பார்க்காமல் நேரே நடக்க ஆரம்பித்தான் வீரத்தேவன். அஞ்சுகம் ஏதும் புரியாதவளாய், தானும் அவனிடம் பேசாது இருந்துவிட்டாள். எல்லா வீரர்களும் நேரே பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி விரைந்தார்கள்.

வீரத்தேவனையும் சிங்கத்தேவனையும் தவிர அனைவரும் உற்சாகமாகக் காணப்பட்டார்கள். பானகம் என்னும் கருப்பட்டித் தண்ணீரை சூடாகத் தயார் செய்து வைத்திருந்தார்கள் பாஞ்சாலங்குறிச்சி மக்கள். ஒவ்வொரு வீரனும் அதைக் குடித்துவிட்டுப் புதிய உணர்வு பெற்றுன். வெள்ளையர்களால் இடித்துத் தூளாக்கப்பட்டு, இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்ட பாஞ்சைக் கோட்டையை மீண்டும் கட்டும் வேலை தொடங்கிற்று. பனஞ்சாறு விட்டுப் பிசையப்பட்ட களிமண்ணுல் கோட்டையை எழுப்பலானுர்கள்! ஏராளமான தீப்பந்தங்கள் முன்னும் பின்னும் உலவின. பொழுதுவிடிகிற நேரம்! கோட்டையின் அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டது. பொழுது விடிந்துவிட்டால் வேலைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு எல்லோரும் போய்விட வேண்டும் என்று ஏற்பாடு! கதிர் உதிக்கும் முன்னுல் கோட்டை வேலை நின்றது. எல்லோரும் ஒவ்வொரு திசையில் சென்று மறைந்தார்கள்.

கண்ணுத்தாளும் அஞ்சுகமும் சுப்பம்மாவும் பாதுகாப்பான ஒரு வீட்டில் இடம்பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் எங்கே தங்கியிருக்கிருர்கள் என்பதை மட்டும் அறிந்துகொண்ட சிங்கத்தேவன் காட்டுக்குள் மறைந்துகொண்டான். வீரத்தேவனும் ஊமைத்துரையும் பாஞ்சாலங்குறிச்சி நகரிலேயே ஒரு வீட்டில் இருந்துகொண்டார்கள்.

அஞ்சுகம் மெதுவாக கண்ணுத்தாளை விசாரித்தாள். அவள்தான் வீரத்தேவனின் தங்கை என்பதைக் கேட்டு அதிசயப்பட்டாள். கேள்வி மேல் கேள்வி போட்டாள். பதில் சொல்வது • கண்ணுத்தாளுக்குக் கடினமாக இருந்தது. உண்மையைச் சொல்லமுடியாது. திரும்பத் திரும்பப் பொய் பேசுவதற்கும் சலித்துவிட்டது. அதனுல் அவள் அஞ்சுகத்தையும் சுப்பம்மாவையும் தொல்லைகளாகக் கருதி 'கொஞ்சம் பேசாமல் இருங்கள்' என்று கூறிவிட்டு, வேறு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டாள். அவள் கருவுற்றிருப்பதாக வைத்தியர் சொன்னதையோ, வீரத்தேவன் அதிர்ச்சி அடைந்ததையோ அவள் அறியமாட்டாள். ஆம்! அவள் மூர்ச்சையுற்றல்லவா கிடந்தாள்! பெருங் குழப்பமும் வேதனையும் அவளைச் சுற்றிக்கொண்டன.

அஞ்சுகமும் சுப்பம்மாவும் அரட்டை பேச ஆரம்பித்தனர். எந்தக் கவலையும் இல்லாமல் சிரித்துக்கொண்டிருந்த அவர்களைப் பார்த்து கண்ணுத்தாள் பொருமைப்பட்டாள். "வாழ்ந்தால் இப்படியல்லவா வாழவேண்டும்! நாம் வாழ்வதும் ஒரு வாழ்வா" என்று தன்னைத் தானே நொந்துகொண்டாள். அன்றையப் பகற்பொழுது முழுதும் இதே வேதனையோடு கழிந்தது.

ஆசிரியர் சுற்றுப்பயணத்தில் இருப்பதால் இவ்விதழில் தொடர்கதை இவ்வளவே இடம் பெற்றுள்ளது. வரும் இதழிலிருந்து குறையாமல், துவளாமல் வெளிவரும்.

தொடரும்

'கண்ணதாசன் கவிதைகள்' வெளியீட்டு விழா

தமிழினம், கவிதையின்பால்-மக்கள் நலம் சொல்லும் இலக்கியத்தின் மேல் கொண்டுள்ள அன்புக்குச் சான்று கூறுவதாய் அமைந்தது, 1-2-59 அன்று வண்ணை தியாகராயர் நல்லூரி திறந்த வெளி அரங்கம் கண்ட காட்சி.

செஞ்சொற் புலவர் பலர்; அழகக் காளையர் ஓரணி; மொழிப் பற்றுற்று விழிப்புற்றெழுந்த முதியோர் ஒரு மருங்கு; கலை உலகத் தோழர்கள் ஒருபுறம்; குழந்தையர்க்கு இன உணர்வூட்டும் அன்னையர் ஒரு வரிசை; 'நூல் வெளியீட்டு விழாவுக்கா இத்துணைக் கூட்டம்' என்று வியந்த மாற்று முகாமினர் ஓர் ஓரம்-இப்படிப் பல தரப்பாரும் குழுமினர்.

அத்துணைப் பேரும் ஒரு சேர வாழ்த்தினர், கவிதைச் சுவையினை உணர்ந்து விளக்கம் தந்த பேச்சாளர்களின் உரை கேட்டு.

ஆசிரியர் கண்ணதாசனின் ஆசிரியப் பெருந்தகையும், அறிவுக்களஞ்சியமும் ஆன பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் தலைமை ஏற்ருர்.

விழாவில் ஆயிரக் கணக்கான தாய்மார்கள் உட்பட 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கட்டுக்கடங்காத வகையில் கூடியிருந்தனர்.

விழா மாலை 6-மணிக்கு, திருச்சி இராமசாமியின் இன்னிசையுடன் தொடங்கியது.

வருகை தந்தோர் அனைவர்க்கும் விழாவை ஏற்பாடு செய்த காவியக் கழகத்தார் சார்பில் நல்வரவு கூறியும், வாழ்த்தனுப்பியோர் அனைவர்க்கும் நன்றி கூறியும், வரவேற்புரை நிகழ்த்தினுர் தோழர் ப. புகழேந்தி அவர்கள்.

பன்மொழிப் புலவர் தம்முன்னுரையில் கண்ணதாசனது கவிதைச் சுவையினை எடுத்துக் கூறி அவர் தொண்டு வளரவும் வெல்லவும் வாழ்த்துரைத்தார்.

அடுத்துக் கழகத் தோழர்களும் தமிழறிஞர் பலரும் கவிதையின்மூலம் அவர் நாட்டுக்கு ஆற்றியுள்ளதொண்டினை விளக்கி, வாழ்த்துரைத்தனர்.

திராவிட மொழி நூலார் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ. அவர்கள் கூறியதாவது :

"சிறந்த செய்யுட்கு இருக்க வேண்டிய இயல்புகள் எட்டு. அவை கருத்து வளம், உணர்வெழுச்சி, சொற்றூய்மை, இலக்கண வமைதி, புதுச் சொற்றொடர்ப் புணர்ப்பு அல்லது சொல்வார்ப்பு, இன்னோசை, நோக்கு, அணி என்பன. இவையனைத்தும் பாவலர் கண்ணதாசனின் பாடல்களில் உள. புரிவார்க்குமட்டும் பயன்படும் அருஞ் சொற்செய்யுட்கள் அழகு என்றும், பொது மக்கட்குப் பயன்படும் எண் (எளிய) சொற் செய்யுட்கள் புலன் என்றும் பெயர் பெறும். பாவலர் கண்ணதாசன் பாடல்கள் பொதுமக்கட்குப் புலனுகுமாறு புலன் முறையில், அதாவது உலக வழக்குச் சொற்களைக் கொண்டு பாடப் பெற்றவை. ஆதலால் படிக்கத் தெரிந்த பொதுமக்கள் எல்லாரும் அவர் பாடற்றிரட்டை வாங்கிப் படித்துப் பயன் பெறுக!"

கலைஞர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. பேசுகையில் அவர் நமக்குக் கிடைத்த ஒப்பரிய செல்வமாய், நம் குடும்பத்தில் ஒரு பிள்ளையாய், நம் நாட்டின் விடுதலைப் படையில் ஒரு வீரராய், பகுத்தறிவுப் பாவலராய், சுயமரியாதைச் சுடராய்க் காட்சியளிப்பதையும், மக்களின் பாராட்டுதலையும் அன்பையும் அவர் பெற்றிருப்பதையும், தோழர் கண்ணதாசனைப் பாராட்டத் தகுதிபடைத்த முக்கியமானவர்களில் மிக மிக முக்கியமானவன் தான் என்றும் கூறி விளக்கினுர்.

தோழர் இராம-அரங்கண்ணல் பேசுகையில், தோழர் கண்ணதாசன் அவர்களை 12 ஆண்டுக்கு முன், நம் இயக்கத்தின் சார்பில் முதன் முதல் சந்தித்த பெருமை தன்னையே சாருமென்றும் அன்று சேலத்தில் 'சண்டமாருதம்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர் இன்று தமது வாழ்க்கையில் ஏற்றமும், எழுத்தாற்றலும், கவிவன்மையும் பெற்று மக்கள் பாராட்டுதலைப் பெற்றிருப்பது காணப் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

கவிஞர் திரு. கம்பதாசன் பேசுகையில் தான் மாற்று இயக்கத்தாராயினும் கண்ணதாசனின் விழுமிய புலமையையும் நிறைந்த தொண்டையும் பாராட்டுவதாகக் கூறினுர்.

தோழர் வி. பி. இராமன் பேசுகையில், தோழர் கண்ணதாசன் நம் மனத்தில் இடம் பெற்றுவிட்ட ஒரு கவிஞர் என்றும், மக்களுக்கு மொழி எப்படியோ அப்படி தோழர் கண்ணதாசனுக்குக் கவி என்றும், அவர் கவியாலேயே பேசவல்லவர் என்றும் கூறிப் பாராட்டினுர்.

தோழர் க. அறிவழகன் பேசுகையில், பாரதி, பாரதிதாசன் கவிதைகளுடன் தோழர் கண்ணதாசனின் கவிதைகளையும் ஒப்பிட்டுக் கூறி, 'உரிய காலத்தில் நமக்குக் கிடைத்த ஒப்பரிய கவிஞர் கண்ணதாசன் ஆவார்' என்ருர்.

புலவர் அன்புகணபதி பேசுகையில், 'தோழர் கண்ணதாசன் ஒரு மக்கள் கவிஞர்' என்ருர்.

தோழர் முரு-சேதுராமன் பேசுகையில், 'தோழர் கண்ணதாசன் கவிதைகள், அறிவுப் பஞ்சம் நீக்க வந்த உணவு' என்ருர்.

பட்டுக்கோட்டை -கலியாணசுந்தரம் பேசுகையில், 'முற்போக்குக் கவிதை எழுதத் தனக்கு வழிகாட்டியாக அமைந்தவர் கண்ணதாசன்' என்ருர்.

பேராசிரியர் மயிலை - சிவமுத்து பேசுகையில், 'படிப்பவர்களைப் பார்த்துச் சிலர் 'இவர்களுக்குப் படிக்கத்தான் தெரியும்' என்று கேலி பேசுகின்றனர்; நடிப்பவர்களைப் பார்த்து, 'இவர்களுக்கு நடிக்கத் தான் தெரியும்' என்கின்றனர்; பேசுபவர்களைப் பார்த்து, 'இவர்களுக்குப் பேசத்தான் தெரியும்' என்கின்றனர்; பாடுபவர்களைப் 'இவர்களுக்குப் பாடத்தான் தெரியும்' என்கிருர்கள். வேறு என்னதான் செய்யச் சொல்கிறீர்கள் ?—என்று கேலி பேசுபவர்களைக் கேட்கிறேன்! சண்டை போடச் சொல்கிறீர்களா ? இம்...அதற்கும் தயார்தான். வந்து பாருங்களேன் ?—என்று ஆவேசத்துடன் கேட்டார்.

— 10-ம் பக்கம் —





— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

இத்தகைய நாட்டிற்கு இன்னும் என்னென்ன சிறப்புகள் தேவை? களத்தின் கண்ணே கலங்கக் கலக்கும் படைஞரும் தறுகண்மை மிக்க தானைத் தலைவரும், தம்மைமையே தமர்க்கு நல்கும் தனிப் பெருந்தன்மை மிக்க குடிமக்களும் நாட்டிற்குத் தேவை. 'பொருபடை தருஉம் கொற்றமும், உழுபடை மருங்கின் ஊன்றுசால் ஈன்றதன் பயன்' எனப்படுவதால் குடிமக்களே அனைத்துக்கும் அடிப்படையாவர் என்பது புலப்படும். இந்தச் சூழலில் அரசு நல்வழியில் நடைபெற அறிவுடைய அமைச்சர்கள் தேவைப்படுவர். இதன் மேலும் படை வேண்டுழி வாளுதவியும், வினை வேண்டுழி அறிவுதவியும் துணையாகும். பிற நாட்டு மன்னரையும் நண்பர்களாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இத்துணைச்சிறப்புக்களும் கொண்ட நாடு எதிர்பாராத வகையிலும் தாக்கப்படாத நிலையில் இருக்க வேண்டும். எவ்வாறெனில் நீரரண், நிலவரன், மலையரண், காட்டரண் என்ற இயற்கையும் செயற்கையுமான அரணமைப்பு அமைந்திருக்க வேண்டும். நாடு நனி சிறந்து விளங்குதற்கு அரிய கருவியாகும் இத்துணைப் பொருள்களையும் தன்னகத்து நிறுத்தி

'படைகுடி கூழமைச்சு
நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு'

எனக் கிளந்தனர்.

இவ்வளவு சிறப்பியல்புகள் ஒருசேர விருந்தும் வேந்தனின் தலைமையினால் நிலைபெறும் நல்லமைதி நாட்டில் நிலவவில்லை என்றால், நாட்டின் இயற்கை நலன்கள், பெரும் பொருட்செலவில் அமைக்கப்பெற்ற செயற்கைப் பொருள்கள் ஆகியவை அனைத்தும் பயனிலவாய் அழிவுறும். இதனைக் கருதியே

'ஆங்கமை வெய்தியக்
கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு'

என்று குறிப்பிடுகின்றார்.

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு அங்கங்களையுங் கொண்ட வேந்தனுக்குரிய கடமைகள் யாவை? பொருள் வருவாய்க்குரிய வழிகளைக் கண்டறிந்து கொள்ளுதலும், அவற்றை மேன்மேல் உளவாக்குதலும் அங்ஙனம் பெற்றவற்றைத் தொகுத்து வைத்தலும், அவற்றைப் பாதுகாத்து வைத்தலும், காத்த பொருள்களை அறம், பொருள், இன்பம் பற்றிப் பகுத்துச் செலவு செய்தலும் மன்னவன் கடமைகளாம். அவற்றுள்ளும் வகுத்தல் என்னும் கடமை வேந்தனின் தலையாய கடமையாகும். பொருள் வளத்தாலும், மக்களின் ஆக்கும் திறத்தாலும், செல்வம் பெருகித் தோன்றும். அச்செல்வத்தைத் துய்ப்போர் சிலரும் அல்லோர் பலருமாகிய நிலை மருவாது ஒருவுதல் வேண்டும். மக்களிடமிருந்து இறுக்கப்பெற்ற இறைப்பொருள், மக்களின் தேவைகளாகிய பலதுறைகளுக்கும் அவ்வத்துறையின் இயல்புக்கேற்ப வகுத்துச் செலவிடப்படுதல் வேண்டும். வாங்கும் வரிப்பொருளும் கொடுப்போர் தம் நிலையினைக் கருத்தில் கொண்டதாகவே அமைதல் வேண்டும். என்னெனில், எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாது பிறிதொன்றும் உள்ளாத பெருவேந்தன் ஒரு துறையோங்கியுயரவும் பலதுறை தாழ்ந்து வீழவும் தனை மறந்தும் இடமளிக்க மாட்டானன்றோ? இதனையே

'இயற்றலு மீட்டலுங்
காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.'

என்று விளக்கினார்.

வரிவிதிக்க வல்லான் என்ற ஒன்றினாலேயே மக்களை நலிவுறச் செய்தல் நன்றன்று. வரிவிதிப்பதுவும் விதித்த வரியினைக் கொள்ளுவதும் தனித்திறனாகும். மக்களது உள்ளம் தளர்வுறாதவாறு வரிகோடலே நன்று. கொடுங்கோல் மன்னன் முறை பிறழ்ந்து வரி தொகுப்பது, தனிவழிச் சென்றானொருவனது கைப்பொருளை வேலேந்தி நின்றானொருவன் அச்சுறுத்தி இடு என ஏற்றது போலவேயாகும். இவ்வாறாயின் வேலோடு நின்றானுக்கும் கோலோடு நின்றானுக்கும் வேறுபாடு ஒன்றுமில்லையாகின்றது. கோலோச்சும் வேந்தன் கன்றூட்டிப் பால் கொள்ளுவான் போலக் காலமறிந்துகொள்ளத்தக்கவனும். அதற்கு மாறாக அம்புவிட்டுப் பால் கறக்க முயல்வது ஏற்புடையதாமோ? கோலோச்சும் பண்பினின்றும் இழிந்தமையால், கொடுங்கோலன், வேந்தனுமல்லன்; வேலைத் தாங்காமல் வேடனது பண்பை மட்டுமே தாங்கியதால் வேடனுமல்லன் என்பதை விளக்கவும் வேண்டுமா? இதனையே.

'வேலொடு நின்றா
னிடுவென்றது போலுங்
கோலொடு நின்றா னிரவு.'

எனத் தெளிவுறுத்துகின்றார் நம் பெருந்தகை.

இத்தகைய கொடுங்கோன்மை மேலிடுமாயின் மக்கள்தம் இன்னல் மட்டில்லாததாகிவிடும். பகைமை பற்றி ஒருவனை வேறொருவன் கொல்லுதல் வேண்டுமென்று திரிகின்றான். அவனைக் கொடியோன் என்று கூறுதல் இயற்கையே; அவ்வாறாயின் பொருள்வருவாய் மிகுதிப்படவேண்டுமென்று நினைக்கும் வேந்தனொருவன் வேண்டியன செய்கின்றானெனின் அவனை முன்னவனைக் காட்டிலும் கொடியன் என்றுதானே கூற வேண்டும். முன்னவனால் விளைவது ஒரு பொழுதைத் துன்பம். பின்னவனோ தன் நிழற்கண் வாழ்வோரை அவர் தம் நோவறியாது வருத்தி முறையல்லனவற்றை இடைவிடாது செய்கின்றவனாவான். எனவே, எப்பொழுதுமே துன்பம் உண்டாவது உறுதி. அப்படி வாங்கிய பொருளையும் நாட்டின் தேவைக்கேற்பச் செலவிடாமல் தான் துய்ப்பதே பெரிதெனப் பயன்படுத்துவனாயின் நாடு நலிவுறும். ஆகவே அப்பருவரலால் தோன்றும் கண்ணீர் வெள்ளம் மன்னவன் செல்வத்தைத் தேய்க்கும் படையாகுமென்று முனைந்து கூறுவோமன்றோ? இதனையே

'அல்லற்பட் டாற்றா
தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்
படை'

என்ற அறிவுரையில் காண்கின்றோம்.

முன்னாட்களில், வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் குழப்பம், காட்டு விலங்குகள் நாட்டில் நுழையாதவாறு காப்பதுபோன்ற சில அடிப்படைச் செயல்கள் மட்டுமே அரசனுக்கு இருந்தன. மக்களின் அன்றாட வாழ்வில் ஆட்சி ஈடுபட்டதெனக் கூறுவர் சிலர். இல்லையென மறுப்பார் பலர். எனினும், மக்களின் வாழ்க்கையையொட்டிய எல்லாச் சிக்கல்களிலும், அரசாங்கத்துக்குப் பங்கு உண்டு. மக்கள் எந்த அளவுக்கு உணவுப் பொருளைப் பயன்படுத்தலாம் என்பது உள்படப் பல செயல்கள் இன்றைய அரசாங்கத்தின் பொறுப்பிலே வர வேண்டியுள்ளது. இதனால்தான், ஆட்சி எந்த அமைப்பைக் கொண்டதாக விருப்பினும் பெரும்பான்மையான மக்களுக்குப் பெரும் பகுதி நன்மையை ஆக்கித் தருவதே நல்லரசின் குறிக்கோள் என்று துணிகின்றனர். எனவே, மிகப் பழங்காலத்தில் ஆட்சியின் பொறுப்பு காவல் வினை மட்டுமேயாகும். அது வளர்ந்து மக்கள் தேவைகளைப் பாங்குற அமைத்துத் தருதலும் அரசாங்கத்தின் பொறுப்பு என ஆவதற்குப் பின்னும் பல நூற்றாண்டுகளாயின.

ஆனால் பொய்யில் புலவராய வள்ளுவர் பெருமானோ ஒரு நாடு அப்பெயரால் அழைக்கப்படத்தக்கதாயின் அது எங்ஙனமிருக்க வேண்டுமென்பதனைச் சற்றேறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்குமுன்பே எடுத்துக் காட்டியுள்ளார்.

தன் நாட்டை நோக்கிப் பகைவன் படை வருவது கண்டு வேந்தன் உள்ளம் வருந்துவான். வருத்தம் அச்சம் பற்றியது அல்ல. மக்களுக்கு நேரவிருக்கும் அல்லலைப் பற்றியதே. வருகின்ற படையைத் தடுத்து வெல்லவும் முயல்வான். பகையொழிக்க விரும்புவது போன்றே பசியையும் பிணியையும் ஒழிக்க எண்ணுதல் வேண்டும். அரசன் அவ்வாறு கருதவில்லையெனின் நாட்டில் ஆற்றுமாக்களும் அரும்பசியுழந்தோரும் நிறைந்துவிடுவர். இந்த நிலை நாட்டில் நீடித்துக் காணப்பட்டால் அரசு குடிகளால் தூற்றப்படுவதாகிவிடும். எனவேதான் வெளியிலிருந்து வந்து அழிவு நல்கும் பகைக்கு இணையாக பசி, பிணி போன்ற பெருங் கேடுகளையும் குறித்தார். அரசனாற்றல், நிலப்படை, அடவி, அரண் ஆகியவற்றால் செறுபகை அடங்கிவிடும். உறுபசி உழவருடைமையாயினும் ஆற்ற விளைதலானும், ஓவாப்பிணி, தீக்காற்று, மிக்க குளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றின்தீமையும் இன்மையானும் அகற்றப்படல் வேண்டும். இதனை,

'உறுபசியு மோவாப்
பிணியும் செறுபகையுஞ்
சேரா தியல் வது நாடு.'

என்று அழகுற அமைத்துள்ளார்.

இரா. வே. நாராயணன் எம். ஏ.,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி (தமிழ்ச்சங்கம்), மதுரை.

நல்லதொரு நாடு பிணியின்மை, செல்வம், விளைபொருள் வளம், இன்பம், நல்ல காவல் என்ற ஐந்து நிலைகளுங் கொண்டு காணப்பட வேண்டும். உறுபசியும் ஓவாப்பிணியும் ஒரு நாட்டில் சேர்ந்தியல்வது கூடாது என்று குறிப்பதன் பொருள் என்ன? இப்பெருங் கேடுகள் இரண்டும் வறுமையினாலேயே பிறப்பனவாம். வறுமை மக்களது வாழ்க்கையில் மிக்க அவலத்தை உண்டாக்கும். அந்தப் பெருங்கேடு சமுதாயத்தின் அடிப்படையைக் குலைக்கும்; நாட்டையே நிலையழிந்து போகச் செய்துவிடும்.

உடுக்க ஓராடைக்கு மேலின்றி, அதுவும் ஊசி நுழைகல்லாத் தன்மைத்தாகவும், உண்ணவோர் கவனத்துக்கு மேலின்றி, அதுவும் வேளை வெந்தையுப்பிலி வெந்ததை அயலோர் காட்சி நாணிக் கதவடைத்து உண்ணும் நிலையுடைத்தாகவும், கையது கொண்டு மெய்யது பொத்தி மக்கள் வாழும் நிலையையே வறுமை என்று விரித்தோதினர்.

எந்த நாட்டிற்கும் வறுமையைப் போல் கொடியதொரு கேடு வேறொன்றுமில்லை. பிற துன்பங்கள் அடுக்கிய கோடி எனினும் ஏற்றுக் கொள்ளல்கூடும்; மாற்றுமுறை காணலும் கூடும்; ஆனால் வறுமை வந்துற்றால் வரவேண்டும் துன்பம் அனைத்தும் ஒரு சேரஒன்றையடுத்து ஒன்று வந்து சேரும். மனிதன் தன் நிலையினின்று இழிந்து அழிவான். இத்தகைய நிலையை ஒரு தனி மனிதனேயல்லாமல் சமுதாயமும் நாடும் கைக்கொண்டு ஒழுகத் தொடங்கின் நாடும் நல்லரசும் நடுக்குறுமன்றோ? எனவேதான்,

'பிணியின்மை செல்வம்
விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ்
வைந்து'

என்று கூறினார் அறம், பொருள், இன்பம், வீடு என்ற இந்நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவர்.

ஆகவே அவர் காணும் நாடு ஒரு குறிக்கோள் நாடு. அங்குவறுமைக்கு இடமில்லை. வாழ்வில் தாழ்வுமில்லை. தற்போது உலகப் பொது நாடுகளின் மன்றம் எண்ணியும் பேசியும் எழுதியும் பரப்பி வருகின்றதாகிய இதனையே சற்றேறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே நம் பெரு நாவலர் பெருகவுரைத்தனர்; இதனைப் பேணி வாழ்வதே நமது பெற்றியாகும். ★

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கொட்டும் கழனிகள், விலைப் பொருட்கள் அளிக்கும் சுரங்கங்கள் அத்துணையும் கொண்ட இந்த வளநாடு அவலப் பேரிரைச்சலில் மூழ்கிக் கிடக்கிறது. இன்று விடுதலைப் போர்க்களமாகத் திகழும் இந்த நாடுதான், அன்று கற்பனை வடித்த புலவர் அணியால் **ரதி பிறந்த நாடு** எனப்பட்டது. அழகில் சிறந்தவளான ரதி பிறக்கும் நாடும் அழகாய்இருக்க வேண்டுமல்லவா? தான் கண்ட இடங்களை எல்லாம் நினைத்துப் பார்த்த அந்தப் புலவனுக்கு ஒரே ஒரு அழகான இடமாய் அந்தத் தீவுதான் பட்டது. அப்படியே புனைந்தும் வைத்தான். நம்பிய உரோமானியரும் அங்கு வந்து பாப்ஹாஸ் என்ற ஊரில் அவளுக்கு ஒரு ஆலயம் கட்டி வழிபட்டனர், கி. மு. 2-ம் நூற்றாண்டில் அதுதான் வீனஸ் ஆலயம். நம் நாட்டுப் புராணங்களில் ரதி எனப்படுபவள்தான், அங்கு வீனஸ். காதற் கடவுள் ஆன அவளுக்கு எடுக்கப்பட்ட கோயில் கால வெள்ளத்தில் அழிந்துவிட்டது. ஆனாலும் அந்நாட்டின் பெருமைகளுள் அதையும் சொல்கின்றனர்.

பழைய பகைகள்...

ரதி பிறந்த அந்த நாடுதான் சைப்ரஸ். தெற்கில் 260 கற்களில் எகிப்து; வடக்கில் 40 கற்களில் துருக்கி; கிழக்கில் 60 கற்களில் சிரியா; மேற்கில் 400 கற்களில் கிரேக்கம்; இப்படி இத்தீவு முழுதும் நடு நிலக் கடலின் அலைக்கைகளால் தழுவப்படுகிறது. அக்கடலில் சிசிலிக்கும் சார்டினியாவுக்கும் அடுத்த பெரிய தீவு இதுதான். 486 கற்கள் நீளமுள்ள கடற்கரையை உடைய இதன் பரப்பு 3486 கற்கள் ஆகும். இந்நாடு பல இனங்களும் மதங்களும் சந்தித்த-கலந்த இடமாகும். இதன் வளத்தை எண்ணிப் படை எடுத்தோர் பட்டியல் பெரிது. வரலாற்றில் முதன் முதலில் இத்தீவு ஆசி என்ற பெயரில் குறிக்கப்பட்டு, அதை கி. மு. 1500-ல் எகிப்தின் மூன்றுவது டெட்மோஸிஸ் வென்றதாகச் சொல்லப்படுகிறது. ஹீப்ரு நில நூலார், கி. மு. 8-ம் நூற்றாண்டில் சைப்ரஸ் கிரேக்கரால் ஆளப்பட்டதாகக் குறித்துள்ளனர். பொனீசியர் கி. பி. 8-ம்நூற்றாண்டில் இதைக் கைப்பற்றினராம். இப்படி அதனை நெடுகிலும் பொனீசியர், ஆசிரியர், எகிப்தியர், பாரசீகத்தார், உரோமானியர், பைசெண்டைனியர், அராபியர், துருக்கியர் முதலிய பலரும் அடிமைப்படுத்திக் கொத்திக் கிழித்திருக்கின்றனர். இதனால் அந்த நாட்டு மக்களின் உடை, உணவு, கலைப்பண்பு, நாகரிகம் அத்துணையிலும் பல பல சாயல்கள் படிந்துவிட்டன.

ஊர்கள்...

இத்தீவில் நகரங்கள் குறைவாயும் சிற்றூர்களே மிகுதியாயும் உள்ளன. தலைநகரமான நிகோசியா தீவின் நடுவில் உள்ளது. 40000 மக்கள் வசிக்கின்றனர். இங்கு அழகிய மாதாகோவில்களும், பெரிய மசூதிகளும், கண்கவர் கட்டடங்களும், பொன்மலர்ப் பூங்காக்களும் மிகுந்துள்ளன. தலைநகர் தவிர பிற முக்கிய நகர்கள் கடற்கரையிலேயே உள்ளன. தென்கரையில் லிமாசல் என்பதும், சிரியக் கடற்கரையை நோக்கி உள்ள கரையில் பாமகுஸ்தாவும் லர்நக்காவும் முக்கியத் துறைமுகங்களாகும். மற்றும் கைரீனியா என்ற துறைமுகமும், ஒலிம்பஸ் மலைத் தொடரும் பெயர் பெற்றன.

மொழி...

கிரேக்கமும் துருக்கியும் ஆட்சி மொழிகளாக உள்ளன. அவற்றோடு இலத்தீன், அர்மேனியம், சிரியாக், அராபியம், ஆங்கிலம் முதலியனவும் பேசப்படுகின்றன. இம்மொழிகளின் பழங்காலச் சொற்களும் இங்கு வழக்கில் உள்ளன.

உடை

இம்மக்கள் பெரும்பாலும் ஆங்கில முறையிலேயே உடை உடுத்தினாலும், விழா நாட்களில் வண்ணமிகு தம் தேசிய உடையான "பஸ்டினிலா" என்ற வகை உடையைத் தான் அணிகின்றனர்.

ஒரு வர்ணக் கைக்குட்டை அல்லது குஞ்சம் தொங்கும் சிறு தொப்பி-தலையில் கட்டிக்கொள்ள அன்றேல் வைத்துக்கொள்ள; ஜாக்கெட்; நீண்ட காலுறைகள்; அவற்றில் கட்ட சில்க் நாடா; வெள்ளை நிறக் கால் சட்டை; இவை தாம் "பஸ்டினிலா" எனப்படும் தேசிய ஆடை. துருக்கிய ஆடைகளும் அங்கங்கே உண்டு. அதில் முக்கியம் தலைப்பாகை கட்டுதல். எவ்வகை உடை உடுத்தினாலும், இம்மக்கள், இடுப்பைச் சுற்றி பல வர்ணக் குட்டையை கட்டிக்கொள்ளுதல் சிறப்பாய் உள்ளது.

தொழில்...

முன்பு. சைப்ரஸ் பித்தளைச் சுரங்கங்களுக்கும் பெயர் பெற்றிருந்தது. இப்போது அச்சுரங்கங்கள் பெரும்பாலும் காலியாகிவிட்டன. ஆஸ்பெஸ்டாஸ் பெறுதல் முக்கியத் தொழிலாய் உள்ளது. கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, ஒயின், ஆலிவ், பல்வகை மரங்கள் முதலியன இத்தீவின் விளை பொருள்கள்; தயாரிப்புக்கள். மீன் பிடித்தல் மற்றொரு முக்கியத் தொழில்.

கல்வி நிலை...

இங்குள்ள கல்வி நிலை பரிதாபத்திற்குரியது. 800 தொடக்கப் பள்ளிகளும் 40 உயர்நிலைப் பள்ளிகளும் ஒரே ஒரு உழவுக் கல்லூரியும் தாம் உள்ளன. கல்விப் பயணத்தில் அது கடக்க வேண்டிய தொலைவு அதிகம்.

கடைத் தேங்காயை...

சைப்ரசை அடிமைப்படுத்தியிருந்த துருக்கியர் 19-ம் நூற்றாண்டில் உருசியரை எதிர்த்துப் போரிடுகையில் பிரித்தானியர் உதவியைப் பெற்றனர். அன்னார் உதவிக்குக் கைம்மாறாக, பிரித்தானியரிடம் சைப்ரசைக் குத்தகைக்கு விட்டனர், துருக்கியர். முதல் உலகப் போரில் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்ததால், பிரித்தானியர் சைப்ரசைத் தம் ஆட்சிக்கே அடிப்படுத்திவிட்டனர். முதல் உலகப் போர் முடிந்ததும் 1915-ல் போரில் தனக்குதவிய கிரேக்கத்திற்கு சைப்ரசை அளிக்க முனைந்தனர், பிரித்தானியர். துருக்கிய மன்னரோ அதை எதிர்த்தார். பின் 1924-ல் லாசன்னி உடன்படிக்கையின்படி பிரித்தனே சைப்ரசை ஆள்வதைத் துருக்கி ஒப்புக்கொண்டது.

இனவழி

பிரித்தனுக்குமுன் 200 ஆண்டுகள் இத்தீவு துருக்கியரின் காலடியில் கிடந்தது. ஒருபோதும் கிரேக்கத்தால் சைப்ரஸ் நேரடியாய் ஆளப்படாவிட்டாலும் அதன் மக்கள் பெரும்பாலும் கிரேக்கப் பரம்பரையினர் ஆனதால், இன்று கிரேக்கத்துடன் இணைந்த ஒரு ஆட்சியை விழைகின்றனர். இப்படி இன வழி ஒன்றுபட்டு ஏறத்தாழக் கூட்டாட்சி அமைக்க விரும்பும் அம்மக்கள் போக்கை எடுத்தோதுவதுதான் "ENOSIS" இயக்கமாகும். அதற்கு "கிரேக்கத்துடன் ஒன்றுபடுதல்" என்று பொருள்

புரட்சியின் தொடக்கம்...

புகைந்து வந்த எரிமலை முதன் முதலில் 1931-ல் வெடித்தது. ஆட்சியை நடத்திய பிரித்தானியக் கவர்னர் மக்களுக்குப் போதுமான குடிநீர் வசதிபற்றி தந்த உறுதியைக் காப்பாற்றத் தவறியதால், திரண்டெழுந்த சைப்ரஸ் தேசியவாதிகள் அரசினரின் அலுவலகம் நோக்கிக் கண்டன ஊர்வலம் சென்றனர். அன்று தேசியவாதிகளும் அலுவலரும் நேரடியாக மோதிக்கொண்டதிலிருந்து இன்றுவரை புரட்சி நடக்கிறது.

கடுமையைப் பாய்ச்சினர் ஆங்கிலேயர். கிளர்ந்தெழுந்தோரின் தலைவர்களை நாடு கடத்தினர்;- எழுதுவதற்கும் பேசுவதற்கும் எல்லை வகுத்தனர்; 1925-ம் ஆண்டு அரசியல் சட்டம் தந்த முறைகளை மறைத்தனர்.

உறவும் பிரிவும்

முசோலினியின், நாட்டை விரிவுபடுத்தும் ஆசைக் கொள்கை 1935-ல் பிரித்தானியருக்கும் இம்மக்களுக்கும் இடையே ஒரு விழிப்பை உண்டாக்கியது. பொது எதிரியை முறியடிக்கக்கூடிய இக்கூட்டு 1954 வரைதான் நிலைத்தது. அவ்வாண்டு ஆங்கிலேயர் தம் மத்தியக் கிழக்குத் தலைமையை (Middle - Eastern Command), சூயசிலிருந்து சைப்ரசுக்கு மாற்றினர். இது தளர்ந்திருந்த "கிரேக்கத்துடன் ஒன்றுபடுதல்" இயக்கத்திற்குப் புது வலிவைத் தந்தது. பிரித்தானியப் பொது நலத்துள் (British Commonwealth) இணைந்திருக்க ஒப்பினால் விடுதலை தருவதாகச் சொன்னது, இங்கிலாந்து ஆட்சி. உடனடியாக எவ்வித நிபந்தனையுமின்றித் தாம் கிரேக்கத்துடன் ஒன்றி வாழ்வதையே விழையும் இம்மக்கள் ஆங்கிலேயரின் "கருணை"யை மறுத்துவிட்டனர்.

தலைவன்...

"புனித வைத்த கிழக்கத்திய மாதா கோவிலின்" ஒரு பிரிவு சைப்ரஸ் ஆண்டி செப்ஹிலோஸ் மாதா கோவிலாகும். அதன் தலைமைக் குருவான ஆர்ச்பிஷப் மகாரியஸ் தான், இந்த இயக்கத்திற்கும் தலைவர். 1913-ல் பிறந்த இவர் ஏதென்சிலும், அமெரிக்காவிலுள்ள பாஸ்டனிலும் கல்வி கற்றுத் தன் தீவிலேயே தலை சிறந்த அறிவாளியானாராம். அவர் 1956 தொடக்கத்தில் இலண்டனில் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டுத் தாயகம் திரும்பியதும் நாடு கடத்தப்பட்டு, செய்செல்லெஸ் தீவில் சிறைவைக்கப்பட்டார். அது தீவெங்கும் பலாத்காரப் புரட்சியைக் கிளப்பியது. பரவலாக, கடுமையான கலகங்கள் எழுந்தன. மறப்போரை மேற்கொண்டு EOKA என்ற அணியும் கிளர்ந்தெழுந்தது. அதன் போர்த் திட்டங்களுள்-ஆங்கிலேயர் எதிர்ப்பு வேலைகளுள் ஒன்றே மேலே நான் குறித்த பொருள் மறுப்பு.

வேறுபாடுகள்

இதன் குடி மதிப்பு 5,25,000. இவருள் 92,700 பேர் துருக்கியர். தொடக்கத்தில் துருக்கியரும் கிரேக்கத்துடன் ஒன்றுபடுவதையே விழைந்தனர். இடையில் ஆங்கிலேயர் கையாண்ட சூழ்ச்சிகளின் விளைவு போலும், "கிரேக்கர் எமக்குத் தீங்கிழைக்கவும் கூடும், குறைந்த எண்ணிக்கையை வைத்து. கி. மு. 2000-க்கு முன்னிருந்தே, கிரேக்கருக்கும் துருக்கியருக்கும் தீராத பகை. எனவே, என்றும்-எப்படியும் எமை வீழ்த்தி அழிக்கலாம் கிரேக்கர். எமக்கென தனியே-மத அடிப்படையில் எம் பகுதிகளைப் பிரித்துத் தந்துவிடுக!" எனத் துருக்கியர் கூறுகின்றனர். அண்மையில் இரு வகுப்பாரிடையும் குருதி வெள்ளம் பெருக்கெடுக்க வைத்த குழப்பங்கள், உறவை மிகவும் அழித்துவிட்டன.

மத்தியக் கிழக்கில் தமக்குச் சரியான தளம் இன்றேல், "ஆட்சி ஆடிவிடுமே; சூயஸ் பிரச்னை கெட்டுவிடுமே!" என சைப்ரசைவிட மறுக்கின்றனர் ஆங்கிலேயர். சைப்ரஸ்-கிரேக்க மக்களோ தம் மண்ணின் ஒரு பிடியையும் ஆங்கிலேயருக்குத் தர ஒப்பவில்லை. இடையிலோ சைப்ரஸ் துருக்கியர் தனி நாடு கோருகின்றனர். நிலை சிக்கலாகிவிட்டது. "ரதி பிறந்த எழில் பூங்கா", ரணகளமாய்ச் சீரழிகிறது.

கிரேக்கர்- ஆங்கிலேயர்- துருக்கியர் ஆகிய மூவரும் ஒரே அளவு அதிகாரம் செலுத்தும் ஆட்சியமைப்பையும் எவரும் ஏற்கவில்லை, திட்டத்தைத் தந்த ஆங்கிலேயரைத் தவிர.வரலாறு சைப்ரசுக்குக் காட்டப் போகும் வழியை எவர் சொல்வர்?

ஆனால்...

அங்கு குன்றுகளிலும் களங்களிலும் கழனிகளிலும் எதிரொலிக்க போர்ப் பாட்டைப் பாடுகிற மறவன் குரல் என்றுகிலும் வென்றுதான் தீரும். அவன் குரலை - போர்முழக்கத்தை - விடுதலை வேட்கையை வாழ்த்துகிறேன்!

—மா. பாண்டியன்.

ஜுபிடரின் +
அண்ணா பத்தி
JUPITER PERFUMERS
M. S. T. V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

புலித்தேவனா கட்டபொம்மனா?

11

அனைத்திந்திய காங்கிரஸ் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துப் போராடியது. முதலில் இந்தியர்களுக்கு உத்தியோகத் துறையில் இடமளிக்க வேண்டும் என்று எழுந்த அந்தக் கோரிக்கை நாளடைவில் வளர்ந்து 'சுயராஜ்யம் எமது பிறப்புரிமை' என உருப் பெற்று, மாபெரும் விடுதலை இயக்கப் போர்க்குரலாக முழங்கியது. அந்த முழக்கத்தில் தங்கள் குரல்களையும் இணைத்துக்கொண்டோர் பட்ட தொல்லைகள் கணக்கிடமுடியாதவை; ஏராளமானோர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள்; தடி கொண்டு தாக்கப்பட்டார்கள்; சொத்து சுதந்திரங்களைப் பறி கொடுத்தார்கள்; துப்பாக்கியால் சுடப்பட்டார்கள்; தூக்கில் தொங்க விடப்பட்டார்கள்.

எப்படியோ, இறுதியில் 1947-ம் ஆகஸ்டு 15-ல் ஆங்கிலப் பேரரசு இந்தியாவில் வைத்திருந்த தனது ஏகாதிபத்திய இரும்புப் பிடியைத் தளர்த்தியது. இந்தியத் துணைக் கண்டம் வெள்ளையர்களிடமிருந்து விடுதலை பெற்றது.

இந்த விடுதலைப் போராட்டத்தின் புனிதத்தன்மையை-அது எந்தெந்த முறைகளில் நடைபெற்றிருந்த போதிலும் - யாரும் மறுத்துவிடமுடியாது. நடைபெற்ற அந்தப் போர் விடுதலைப்போர் அல்ல எனச்சொல்ல யாரும் துணியமாட்டார்கள். ஆனால், இத்தகு போராட்டம் நடத்திய அனைத்திந்திய காங்கிரசை, அதன் அந்த விடுதலைப்போர்த் தொண்டர்களை, என்றைக்காவது அதிகாரபூர்வமாக வெள்ளைக்காரர்கள் விடுதலை இயக்கம் என்றோ, விடுதலை வீரர்கள் என்றோ குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால், அதுதான் இல்லை! அவர்கள் அப்படிக் குறிப்பிடாதது ஆச்சரியப்படத்தக்கதல்ல. அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்; சொல்லவேண்டும். ஏனென்றால், அவர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தை அவர்கள் விடுதலை இயக்கம் என ஒப்புக் கொண்டுவிட்டால் அவர்களின் பிடிவாதத்தில் அர்த்தமே இல்லையே! சத்தம் போடாமல், சட்டங்களைக் காட்டாமல், சமரசம் பேசி மட்டுமே அல்லவா சுதந்திரத்தைத் தந்துவிட்டுச் சென்றுவிட வேண்டும் ஆரம்ப காலத்திலேயே. ஆனால் அப்படியா நடந்தது? எத்தனை போர்கள்; அடக்குமுறைகள்; அவதிகள்!

வெள்ளைக்காரர்கள் தங்களுக்கு எதிராக நடைபெறும் எந்தப் போராட்டத்தையும் - அது எத்தனை நியாயத்தைக் கொண்டிருந்தாலும், எத்தனை அமைதியான முறையோடு நடந்தாலும் - விடுதலைப் போராட்டம் என ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; ஒப்புக்கொண்டதில்லை!

ஆனால், இங்கே நமது ம. பொ சி., 'புலித்தேவன் நடத்திய போராட்டத்தை அவர்கள் விடுதலைப் போராட்டம் என ஒப்புக்கொள்ளவில்லை பார்த்தீர்களா?-இதிலிருந்தே அவர்கள் புலித்தேவனை விடுதலை வீரன் எனக் குறிக்கவில்லை என்பது தெரிகிறதே' என்கிறார்.

ஏதோ வெள்ளைக்காரர்கள் விடுதலைப் போர்வீரர்களின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்துவைத்திருப்பதுபோலவும், அதில் புலித்தேவனின் பெயர் மட்டும் இல்லாமல் மற்ற எல்லோருடைய பெயரும் உள்ளது போலவும் அவர் குறிப்பிடுகிறார்.

புலித்தேவன் இருக்கட்டும்; ம. பொ. சி. போற்றும் கட்டபொம்மனைத்தான் அவர்கள் விடுதலைவீரன் என்று எந்தப் பட்டயத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள்? கட்டபொம்மன் போகட்டும். அவனுக்குப் பிறகு அவர்களை எதிர்த்த ஊமைத் துரையை, சிவகெங்கை இராணி வேலுநாச்சியை, மருதுசகோதரர்களை, திருவிதாங்கூரில் போரிட்ட வேணாட்டுவீரன் வேலுத்தம்பியை அல்லது வேறுயாரை விடுதலை வீரர் என்றார்கள், புலித்தேவனை மட்டும் விட்டுவிட?

ம. பொ. சி. தான் சொல்லவேண்டும்!

"ஆங்கிலேயர் தங்களை எதிர்த்து நடைபெற்ற போர்களில் மறைந்த தங்கள் வீரர்களுக்குநினைவுச்சின்னங்கள் அமைத்தார்கள். அப்படி அமைத்த அவர்கள், கட்டபொம்மன் காலத்திலும், பின்னர் நடைபெற்ற பாளையக்காரர் போரிலும் மாண்ட வெள்ளையருக்கு மட்டுமே அவற்றை அமைத்தார்கள்; புலித்தேவனின் காலத்தில் மாண்டவர்களுக்கு இல்லை—இதிலிருந்தே அவர்கள் புலித்தேவனின் போரை விடுதலைப் போரென மதிக்கவில்லை என்பது தெரியவில்லையா" என்றும் ம. பொ. சி. சொல்கிறார்.

இந்தக் கூற்றிலும் உண்மை இருப்பதாக நமக்குப் புலப்படவில்லை.

ஒரு போரில் மாண்டவர்களுக்கு அமைக்கப்படும் நினைவுச் சின்னங்களைமட்டும் வைத்துக்கொண்டு எந்த நாட்டு விடுதலைப் போரும் கணக்கிடப்படுவதில்லை. நினைவுச் சின்னங்கள் அமைப்பதும் கூடாததும் அந்தந்த நேரத்தில் அதிகாரத்திலிருந்தவர்களைப் பொறுத்தது; அரசாங்கத்தைப் பொறுத்ததல்ல. இது சாதாரண ஆட்சிமுறை (Administration) விவகாரங்கள் தெரிந்தவர்களுக்கும் புரியும்.

இந்தத் தெற்குச் சீமை விவகாரம் இருக்கட்டும். பின்னாளில் வடக்கே, வட இந்தியாவில் வெள்ளையருக்கு எதிராக நடைபெற்ற எல்லாப் போர்களிலும் மாண்ட வெள்ளை வீரர் அனைவருக்குமா நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன?

இதுவும், திரு. ம. பொ. சி.க்குத் தான் வெளிச்சம்!

சுருக்கிக் கணக்குப் பார்த்தால் இதுதான்;

'வீரபாண்டியக் கட்டபொம்மன் விடுதலைப் போர் வீரன் என்றால், புலித்தேவனும் விடுதலைப் போர் வீரனே. புலித்தேவன் விடுதலைப் போர் வீரன் அல்லவென்றால் கட்டபொம்மனும் அப்படியே!'

(தொடரும்)

ப. புகழேந்தி

★ ★ ★

— 7-ம் பக்கத் தொடர்ச்சி —

'தோழர் கண்ணதாசனின் தொண்டு வாழ்க; அவர் சார்ந்திருக்கும் கழகம் வாழ்க' என்று வாழ்த்தினர்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்களுக்கு நன்றியுரைத்து கண்ணதாசன் பேசுகையில், இப்பாராட்டுகளெல்லாம் தம்மை மேலும் மேலும் எழுதத் தூண்டும் என்றும், தம் பணி இத்துடன் நின்றுவிடாமல், தொடருவதற்கு இவ்விழா, பெரிதும் தூண்டுகோலாக இருக்குமென்றும், தமது முதல் கவிதைக்கு அண்ணா அவர்கள் அளித்த பாராட்டுரையே, தம்மை இத்தனை கவிதைகளையும் எழுதத் தூண்டுவதாக அமைந்தது என்றும், தம்மை முதன் முதலில் 'கவிஞர்' என அழைத்து பாராட்டியவர் தோழர் மு. கருணாநிதி அவர்கள்தான் என்றும், தமது கவிதைகளுக்குப் பேராதரவு காட்டி, பெருமையூட்டியது அண்ணா தலைமையில், பல இலட்சக்கணக்கான இளைஞர்களைக்கொண்டு இயங்கும் தி. மு. கழகம்தான் என்றும், தமக்கு ஐந்தாண்டு ஆசிரியராக அமர்ந்து தமிழ் பயிற்றுவித்தவர் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் தாம் என்றும் கூறி, அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வி. பி. டி. புரொடக்ஷன்ஸ், வாசு பிலிம்ஸ், பத்மா பிலிம்ஸ், சூரியா பிலிம்ஸ், கே. எம். டி. வி. என். புரொடக்ஷன்ஸ் ஆகியோர் ஆசிரியரைப் பாராட்டிப் பல பரிசுகளளித்தனர். திரு. கே. எஸ். ரங்கநாதன் (அம்பி) மாலை அணிவித்தார். திரு. வடு. லெ. சுப்பையா அவர்கள் ஆசிரியர்க்குப் பொன்னாடை ஒன்று போர்த்திச் சிறப்பித்தார்.

ம. பொ. சிவஞானம்
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி
க. அன்பழகன்
வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.
பேராசிரியர் வ. சுப. மாணிக்கம்
கருமுத்து தி மாணிக்கவாசகம்
கருமுத்து தி. சுந்தரம்
ஔவை. சு. துரைசாமி
நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர்
சுந்தரராவ்நட்கர்னி முதலியோரும்

மற்றும் பலரும் விழா சிறப்போடும் வெற்றியோடும் நடைபெறத் தம் வாழ்த்துக்களை அனுப்பினர்.

அடுத்து கண்ணதாசன் அவர்கள் இயற்றிய பாடல்கள்சிலவற்றைத் தோழர் டி. ஆர். மகாலிங்கம், ஏ. எம். ராஜா, தோழியர்கள் டி. எஸ். பகவதி, ஜமுனாராணி முதலியோர், விசுவநாதன்-இராமமூர்த்தி குழுவினரின் பின்னணி இசையுடன் பாடிக் காட்டி மகிழ்வித்தனர்.

இறுதியாக, காவியக் கழக உரிமையாளர் கண்ணப்பா வள்ளியப்பா தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ★

தென்றல்

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

தள்ளப்பட்டாலும் அது சர்க்காரின் தவறல்ல; போலீஸ்காரரின் தவறு தான் என்று கம்யூனிஸ்ட் சர்க்கார் துணிந்து சொல்கிறது! சென்னையிலும் பம்பாயிலும் சுட்டால் கம்யூனிஸ்ட்கள் போலீஸ்காரன் தவறு செய்துவிட்டான் என்று பேசுவதில்லை-சர்க்காரைத்தான் குற்றம் சாட்டுவார்கள்! முதலாளிகள் கேரள சர்க்காரின் போலீசுகளை விலைக்கு வாங்கிவிட்டார்களாம்-மகாக் கேவலம். கிருஷ்ணய்யர்கள் இன்னும் மந்திரிகளாக இருக்கிறார்கள்-இந்தக் கைம்பெண் நிலையை மறைக்க, கேரளத்தில் அராஜகம் இல்லை என்கிறார்கள்!

★

எஸ். டி. சமுத்திரபாண்டியன், விருதுநகர்.

ரஷ்யா சென்றுள்ள கேரள முதலமைச்சர் கேரளாவிற்கு உதவி செய்யும்படிக் கேட்கத் துணிவது மத்திய அரசாங்க அனுமதியின்றி நடைபெறலாமா?

சங்கரன் நம்பூதிரிபாட் புதுடில்லியில் பேசும்போது, 'நான் ஒரு முதலமைச்சனாகப் போகவில்லை. ஒரு பிரஜையென்ற முறையில் தான் போகிறேன். ரஷ்ய உதவியை வேண்டிப் பெறுவேன்' என்றார். இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு ஆட்சி நடத்துவோம் என்று சொன்ன அவர் 'மத்திய சர்க்கார்' என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டார்! மாஸ்கோ மாளிகை நோக்கிப் புறப்பட்ட வேளையில் என்னென்ன எண்ணினாரோ, பிர்லாவுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டாவது கம்யூனிஸ்டு மந்திரி சபையை நடத்துவிக்கும் திறமைக்குக் குருஷ்சேவ் சர்க்கார் அதனுடைய ஏழாண்டுத் திட்டத்தையே கேரளாவுக்குத் தருமென்று கூடக் கருதியிருப்பார்! நேரு கொடுத்தபரிசுகளைக்கூடசங்கரனே எடுத்துச் செல்கிறார். மாஸ்கோ விலேயுள்ள இந்தியத் தூதர் மேனனுக்கு வேலையே இல்லை! பாராளுமன்ற உறுப்பினர்களைக் குறைத்துப் பேசிய குற்றத்திற்காக அடுத்து வரும் கூட்டத்தில் அவர் திரௌபதைக் காட்சியாகத் துகிலுரியப்பட இருக்கிறார் மசானி போன்ற உறுப்பினர்களால்! கேரள முதலமைச்சர் மாஸ்கோ மாளிகையில் எத்தனை வரம் வேண்டிப் பெற்றாலும் அதற்கு புதுடில்லி மூலவர்களிடம் ஒப்புதல் பெற்றாகவேண்டும்! இதனைப்பார்லிமெண்டில் எழக்கூடிய பிரச்னையாகவும் கருதலாம்! மொரார்ஜி தேசாய் அமெரிக்கப் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியை, கம்யூனிஸ்டுகள் காரசாரமாகக் கண்டித்தனரே-இப்போது அந்தக் காம்ரேடுகள் தங்களது வீரத் தலைவனை-சங்கரன் நம்பூதிரியாரைபபற்றிப் பேச முன் வருவார்களா? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்நிய உதவி வருகிறதென்று சொன்ன ஜனசக்தி மூளைகள் இதைச் செய்யும்படியும் தூண்டுவார்களா? மதுரையில் பேசிய கேரளக் கவர்னர் ராமகிருட்டிண ராவும் மத்திய சர்க்கார் ஒப்புதல் பெற்றே ஆக வேண்டும் என்றுதான் சொல்லியுள்ளார்! சட்ட ஞானம் பெற்ற இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் கேரளத்தாரை குறை சொல்லத் துணிவு வராது!

★

ந. சுப்ரமண்யம், பெங்களூர்.

"நாடோடி மன்னன்" திரைப் படக் கருத்துக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகள்தான்; புதுமையாக-புதியதாக இல்லையென்று 'ஜனசக்தி'யில் ஒருவர் பேசியதாக இருக்கிறதே அது சரியா?

கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு வியாதி இப்படியும் இருக்கிறது. அவர்களாக எதையும் சொல்லமாட்டார்கள். யாராவது எடுத்துக் காட்டினால் இது தங்களால்தான் என்று துணிந்து பொய் சொல்வார்கள்! 'நாடோடி மன்னன்' கருத்துக்கள் கம்யூனிஸ்ட்களைப் பிரதி பலிக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். இதுபோலவே கலைஞர் கருணாநிதி அவர்களின் "திரும்பிப் பார்" படம் வெளி வந்தவுடன் அதிலே வருகின்ற 'போலித் தலைவன்' தொழிலாளர் துரோகியின் பகுதி கம்யூனிஸ்ட்களை வேண்டுமென்றே கிண்டல்செய்யப் பட்டிருப்பதாக ஜனசக்தியில் விமர்சனம் செய்திருந்தார்கள்! 'நாடோடி மன்னன்' படம் நடைபெற்றபோது மதுரை தங்கம் தியேட்டரில் நின்று ஞாயிறு தோறும் உண்டியல் குலுக்கியவர்கள், காசு பெற்றுக்கொண்டவர்கள் கருத்துக்களைத் தங்களுடையது தான் என்று ஏற்றுக்கொள்ளவில்லை! கம்யூனிஸ்ட்களைப் போன்ற ஒரு கும்பலை அந்தப் படம் எடுத்துக் காட்டியதால் உள்ளம் நொந்து சாடினார்கள்!

★

ஒரு கம்யூனிஸ்ட், விக்கிரமசிங்கபுரம் (நெல்லை)

கர்வம் பிடித்த கூடலரசனே-எங்கள் மாஜினி உன்னுடைய டாங்கேபற்றிய அவதூறுக்கு சரியான 'டோஸ்' கொடுத்து விட்டாரே. படித்துப் பார்த்தாயா? என்ன சொல்லப் போகிறாய்!

பெயர் கூற வெட்கப்படும் தோழரே அதிகச் செலவு செய்து இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். சுருக்கமாகப் பதில் கூறினால் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள்! உங்களைப் போன்ற அவசரக்காரர்களின் பாராட்டுதலைப் பெற வேண்டித்தான் மாஜினியார் எங்கள் கவிஞரைப்பற்றி பலப்பல தூற்றல் மொழிகளை சொல்லிவிட்டார். அடுத்த கிழமை 'தென்றல்' புயலாக வீசும். உங்கள் 'மாஜினியார்' சிக்கித் திணறப் போகிறார்!

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஸை: க. சங்குபிள்ளை, 13, திண்டுக்கல்ரோடு, மதுரை •

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்தாம் ஆண்டுப் பயணத்தில் பெரும் வகையில் பூரிப்படையத் தக்க நிகழ்ச்சிகளாகத் திராவிடர் திருநாள் விழாக்கோலம் சென்னை முதல் குமரிமுனை இறுதியாக இன்பம் திளைத்திடச் செய்துள்ளது. நகர்ப் புறங்களிலே பல கூட்டங்கள், சிற்றூர்களிலே சில நிகழ்ச்சிகள், இப்படி எண்ணிலடங்காதவைகள்! பொங்கல் விழாவை மென்மேலும் சிறப்பிக்க விரும்பிய ஆர்வம் படைத்த பல தோழர்களின் ஆசை நிறைவேறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தனித்தன்மைகள் பல நிறைந்த, பலப்பல சிறப்பியல்புகளையும் பெற்றுள்ள சொல்லின்செல்வர்களைத் தன்னத்தே வைத்துள்ளது. இருந்தாலும்கூட ஏறத்தாழ 3000 கிளைக்கழகங்களையும் உட்கிளை மன்றங்கள் படிப்பகங்களையும் கட்டிக்காத்து வருகின்ற காரணத்தால் விழாவினைச்சிறப்பிக்க, சொற்பொழிவாளர்களைத் தேடிப் பெறமுடியாமல் தவிக்க நேரிட்டது. யாரைக் கேட்டாலும் இப்போது நேரமில்லை;இன்னொரு சமயம் வருகிறேன் என்ற விடைதான்! முத்து வருவாரா? முடியாது. நான் கடலூரில் பேச வேண்டும். சந்தானம் வருகிறாரா-இல்லை. நான் சேலத்தில் பேச வேண்டும்! இன்னொரு புறத்திலே கோவை மாவட்டச் செயலாளர் ப. நாராயணன்பங்கேற்கிறார். நீங்கள் யாரையும் எதிர்பார்க்காதீர்கள். இப்படித்தான் செய்திகள் கிடைத்தன. காஞ்சியிலேயிருந்து அண்ணாவை அழைக்கலாமா - தசரதனார் தயவு வைப்பாரா-என்று முயன்று அதுவும் முடியவில்லை! நான் ஒரு வினாடி எண்ணிப்பார்த்தேன். தமிழகத்தில் வேறு எந்த ஒரு இயக்கமும் மக்கள் மன்றத்திலே வைத்துள்ளதொடர்பை தினம் தினம் வலுப்படுத்திக்கொள்ள இப்படிப் போட்டியிட்டுத் துடிக்கும் தன்மையை உணரமுடியவில்லை. மற்ற மற்றக் கட்சியினருக்கெல்லாம் எப்போதாவது ஒருநாள் வரும் அன்றைக்கு ஒரு கூட்டம் போட்டால் போதுமென்ற நிலையில் இருப்பவர்கள்! ஆனால் நமக்கு நாட்டுடன் தொடர்பு. நாட்டுக்கு நம்மைவிட்டால் வேறொருவர் துணையில்லை! பேசியதையே திரும்பப் பேசுகிறோம். இந்த நாதத்திலே பேதம் காண்பவர்கள் இல்லை. ஆட்களில் மாற்றம் இல்லை. கேட்பவர் தொகையும் குறையவில்லை. எண்ணிக்கை வளர வளர நாமும் வளர்கிறோம்!

திராவிடர் திருநாளையும் கழகத் துவக்க விழாவையும் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் மன்றத் திறப்பு விழாவையும் ஒன்றாக இணைத்தும் பிணைத்தும் ஒரு பெருமைமிக்க நிகழ்ச்சியாக்கிவிட்டார்கள் நெல்லை மாவட்டத்து குலசேகரன்பட்டினம் தோழர்கள்! எங்கெங்கிருந்த நண்பர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, புரட்சி நடிகரின் ஒப்புதலையும் பெற்று மன்றம் திறந்தார்கள்! காலையிலும் மாலையிலும் இலட்சியங்கள், திருநாட்டின் தேவைக்கான கொள்கைகள், சமுதாயத்தின் வளர்ச்சிக்கான வழிவகைகள், மொழியின் எழுச்சிக்கான எண்ணற்ற ஆய்வுரைகள் பல தோழர்களாலே வழங்கப்பட்டன! அந்தச் சிங்கத்து மறவரெல்லாம் சிங்களத்து வாணிகம் நடத்தி இன்று சிதைந்துபோன குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்! குலசைநகர் பண்டைப் புகழ்கொண்ட துறைமுகப் பட்டினம். இன்றைக்குத் தூத்துக்குடிக்கும் கீழே தூர்ந்து போன கடல் ஆழத்தில் நிற்கின்றது. காலை வெளுக்கும்போது படகுகளின் படை வரிசை நூற்றுக் கணக்கில். மீன்பிடிப்போர் அவர்தம் வாழ்க்கைக்குத் தோணியாகவும் ஏணியாகவும் இருப்பதே அந்தத் தொழில்தானும்! பெரும் படகுகள் கரையோரத்திலேகட்டிக்கொண்டுள்ளார்கள். முக்கால்லட்சம் தொகை அதன் விலையாகும் என்று சொன்னார்கள்! செல்வத்திலே மிதந்த நகரம் தன் சீர்குலைந்து காட்சி தருகிறது. வீடுகளை விட்டுப்போனவர்கள் பலர் அழிந்துபோன இந்தத் துறைமுகத்துக்கு வரவேயில்லை! திருச்செந்தூர், குலசேகரன்பட்டினம், மனபாடு கிராமம் கடல் கரையோரத்து இடங்கள். கண்ணுக்கு விருந்து தருகின்றன. கடந்தகாலம் கருத்துக்கு வேலையைத் தந்தது! அவர்கள் கள்ளத்தோணிக் கதைகள்-பாய்மரத்துடன் கஞ்சி நீர்க்கலயத்துடன் தினம் தினம் நடத்துவிக்கும் போராட்டம். நீர்கடலின் அலைகளில் சிக்கித் தவிக்கும் பரிதாபம் இதயத்தின் அடித்தள உணர்ச்சியை தொட்டுப் பார்த்தன! நானும் தூத்துக்குடித் தோழர்களும், தாளமுத்துவின் தங்கையரும் குலசை, உடன்குடி, கழகத்தோழர்களின் ஆர்வத்தைக் கண்டோம். எதிர்க்கட்சிக் கூட்டங்களையே கேட்டிராத அந்த மக்கள் அனுதாபத்துக்குரியவர்கள்! அந்தக் கடலோரத்திலேதான் நம் கழகக் குரல் கேட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தின் புகழ் வளர்க்கும் வகையில் குரல் கொடுத்த தோழர்களின் பணி வெல்க! வாழ்க!

—கூடலரசன்

விருத்தப் போட்டி

தெங்கொத்த தமிழை, இன்பத்
திருவளர் நாட்டைச் சாடி
இங்கெத்தர் வாழ எண்ணின்
இயல்வதோ? அன்றே! அன்றே!
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பங்கத்துக் காளாய்த் துன்பம்,
பழி, இகழ்(வு) ஏற்பார் தம்பி!
—பனை. சண்முகம், நெற்குப்பை.

★

எங்கத்தான் நேற்றுக் காணேம்
என்றெனைக் கண்ணுல் கேட்ட
தங்கத்தை உருக்கி வார்த்த
தமிழ்ச்சிலை அவள்க மூத்தில்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
தங்கத்தின் அணிக ளெல்லாம்
தம்மெழில் இழந்த தையோ.
—நாஞ்சில் ஆ. ஆரிது, திருவத்திபுரம்.

★

சிங்கத்தை யொத்தி ருக்கும்
செந்தமிழ் வீரந் தன்னைப்
பங்கமாய்ப் பழித்த தாலே
பகைஞராய் வடக்கின் மன்னர்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
செங்குட்டு வன்முன் நின்றார்
சிரித்தது தமிழர் வீரம்.
—கவி. முத்துப்புலவன், பனங்காட்டூர்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குநம் தமிழை வந்தே
எதிர்த்திடும் இந்தி தன்னை
மங்கத்தான் செய்து; செத்து
மடியத்தான் செய்து; வாழ்வில்
அங்கங்கள் பூரிக் கத்தான்
அண்ணுசொல் வழிந டப்போம்.
—தமிழ்க்கோவன், புதுவை.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
தங்கத்தின் முன்னே தேய்ந்த
தகரத்தின் சுருளைப் போலே
செங்கோலின் முன்னே காய்ந்த
சுள்ளியின் நிலையாய் இன்றே
இங்கெங்கள் தமிழின் முன்னே
இந்தியே நீயு மாவாய்!
—இரத்தினசமர்த்தனன், புதுச்சேரி.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குப்பேய் ஆட்டம் போடும்
இந்தியைப் பிடித்துத் தூக்கில்
தொங்கத்தான் விடுவோம் அன்றித்
தொழுதிட மாட்டோம். என்றும்
சங்கத்தில் வளர்ந்த இன்பத்
தமிழையே தொழுது வாழ்வோம்.
—குகன்குருசாமி, கமுதி.

★

செங்கரம் கொடியை ஏந்தச்
சிந்தனை மறத்தை ஏந்தத்
தங்கநற் றமிழ கந்தான்
தரணியில் உரிமை ஏந்த
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குற்ற வடவர் ஆட்சி
எதிர்த்துநாம் உரிமை ஏற்போம்.
—சொ. பார்வதி, ஈரோடு.

★

சங்கத்துத் தமிழை மெல்லச்
சாய்த்திட முனையும் இந்தி,
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே.
எங்களை எதிர்ப்பென் செய்யும்?
எருவாகும்; ஏற்ற மாவோம்!
வெங்களம் சமைப்போம்! வேண்டாம்
வெறிவிடு! நெறியில் நிற்பாய்.
—காரைச்செல்வி, காரைக்கால்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குற்ற வடவர் சூழ்ச்சி
இயல்பினை அறிந்து தோழா!
தங்கத்துத் தமிழர் நாடு
தமிழ்மொழி ஓங்க நீதான்
பொங்கிடும் உரிமை நாட்டப்
போர்க்கொடி ஏந்து, போபோ!
—ஓடை. இரா. வடிவேலன், பேரோடு.

★

வங்கத்தின் வாயிற் றண்டி
வடவரை வென்று ரன்று
செங்களக் குருதிக் காட்டில்
செந்தமிழ் மறவர் கூட்டம்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
அங்கத்தை யொடுக்கி இன்றே
அடங்கினர் வெட்கம், வெட்கம்!
—கு. சித்தா, பனப்பாக்கம்.

★

எங்கெங்கும் தமிழர்க் கின்னல்
இழைத்திடும் வடவர் தம்மைச்
செங்கள வுணர்வு பொங்கச்
சேர்ந்தினித் தமிழர் நின்றால்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
"சங்காரம் வடவர்" என்றே
சாற்றிநீ முழங்கு சங்கே.
—பசுமலை வீர. முருகேசன், மதுரை.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
சிங்கள நாட்டா ரின்று
சினந்துநம் முன்னிற் கின்றார்
வெங்கரி போன்றே நம்மோர்
வெகுண்டெழும் நாளெந் நாளோ?
பொங்கிநா மெழுந்தா லிந்தப்
புல்லரின் நிலைதான் யாதோ?
—ஆர். எம். அலியார், முதுகுளத்தூர்.

★

வெங்கண்ணு சூழ்ச்சி யாலே
விழுந்ததே தஞ்சை யந்நாள்
எங்கண்ணு தொண்டி னலே
எழுந்ததே தெற்கு மிந்நாள்
இங்கில்லை ஈடு நம்மை
எதிர்ப்பவர் சூது மாயும்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே.
—க. பொ. இளம்வழுதி,
கலிதீர்த்தாள்குப்பம்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பொங்குற்ற தமிழர் முன்னே
புதுவகைச் சூழ்ச்சி யாலே
சங்கத்துத் தமிழி ருக்கச்
சக்கையாம் இந்தி தன்னை
இங்குற்றுப் புகுத்து கின்றீர்
எரிதழல் தீண்ட லாமோ?
—கலையழகன், நெய்வேலி.

★

மங்கல நாணைச் சூடி
மகவெனைத் தூக்கிப் பத்தாம்
திங்களில் ஈன்ற என்றன்
தாயவள் இருந்தால் துன்பம்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பங்கமுற் றோடிப் போமே
'பாவிநான்' என்று நோவேன்?
—'கவித்தங்கை', பெருமாள்வலசு.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பொங்கிடும் திராவி டத்தில்
புகுந்திடும் வடவர் சூழ்ச்சி
மங்கியே மறையத் தெற்கு
மாநில மக்கள் ஒன்றாய்த்
தங்கள்நல் உரிமை பெற்றுத்
தாய்மொழி காத்தல் என்றோ?
—பி. மணிவேந்தன், அய்யாபுரம்.

★

மங்கிற்றுத் தமிழர் வாழ்வு
மாடோட்டி வந்தோர் தம்மால்
பொங்கித்தோள் புடைத்தே இன்று
புறப்பட்டோம்; நில்லோம், ஓயோம்;
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்கெத்தர் கூட்டம் யாவும்
எம்முன்னர் தூள்தூள் தூளே.
—கோ. முருகுசுப்பிரமணியன், (பி. ஈ.),
சிங்காரப்பேட்டை.

★

மங்கிடும் தென்ன கத்தை
வளம்பெற மீட்கச் சென்றால்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பொங்கியே புல்லர் கூட்டம்
புறஞ்சொலிப் போவார்; நீயோ
தங்கிடும் கொள்கை விட்டுத்
தவறிடக் கூடா தப்பா.
—வே. திருவேங்கடம், இராதாபுரம்.

★

தங்களின் மொழியைக் காக்கத்
தமிழரும் எழுச்சி பெற்றுப்
பொங்கினர் மனதிற் குள்ளே
போர்க்களம் காண எண்ணி!
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பங்கமே யடைவீர் இந்தி
பரப்பிடத் துணிந்தோ ரெல்லாம்.
—ம. முகமது மைதீன், சென்னை-2.

★

தங்கத்தின் தகவின் முன்னே
தாமிரந் தன்னைப் போலே
துங்கத்தண் மதியின் முன்னே
தோன்றுமின் மினியைப் போலே
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
சங்கத்தென் தமிழின் முன்னே
சாயுமாம் இந்தி தானே.
—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

வங்கத்துக் கிப்பால் உள்ள
வளர்தமிழ் நாட்டில் வந்தே
இங்கெத்தர் ஊனை யிட்டார்
இந்தியைத் திணிப்போ மென்றே
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பொங்குற்ற கோபத் தீயில்
பொசுங்குவார் மீள மாட்டார்.
—நாகநாதன், சென்னை-1.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.